Registered as a Newspaper in Ceylon

விலை சதம்10

ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (27-6-66) இதழ் 140

பராபவ ஆனி 13 ரபி அவ் 7 திங்கட்கிழமை

மினனும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்

AKS

போன் 519

நகை மாளிகை

கன்ஞதிட்டி, யாழ்ப்பாணம்.

திருடாகளைப் பிடித்த கிளி!

லண்டன் ஜூன் 26

லண்டனில் பில எனப் பெயர் கொண்ட ஒரு பச் சைக்கிளி நேற்று திருடர் களைப்பிடித்துக்கொடுத்தது. 74 வயதும் 56 வயதும் கொண்ட இரு சகோதரர் கள் வீட்டில் திருடர்கள் புகுந்தார்கள். திருடர்களு டன அவர்கள் நடத்திய

(5-ம் பக்கம் பார்க்க)

பிரதமரின் கிழக்கு விஜயம் புதிய திருப்பம்

தமிழ் மக்கள் மனதில் புதிய நமபிக்கை தேசிய ஐக்கியத்தை புதிதாக பலப்படுத்தியுள்ளது

கொழும்பு, ஞாயிறு

கல்முனையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் 10வது ஆண்டு மகா நாடு சமீபகால இலங்கையின் தேசீய ஐக்கிய சரித்திரத்தில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துமென விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

தேசிய அரசாங்கத்தில் பெரும்பான்மைத் தமிழ்மக் களின் பிரதிநிதித்துவ ஸ்தா பனமாக விளங்கும் தமிழர சுக்கட்சியின் மகாநாட்டில் பிரதமர் திரு. டட்லி சென நாயகா கலந்துகொண்டு சிறு பான் மை யி ன ரி ன் மொழி, மதம், கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாக்க அரசாங்கம் முயலுமென அளித்த வாக்குறுதி, தமிழ் மக்களிடையே புது நம்பிக் கையை ஏற்படுத்தியிருப்ப தாகக் கணிக்கப்படுகிறது.

தமிழ்மக்களின் கோரிக் கையையும், அபிலாஷை களையும் பிரதமர் நேரடி யாக அறிந்துகொள்வதற்கு இம்மகாநாடு ஒரு சிறந்த வாய்ப்பளித்தது. அதேசம யம் இலங்கையின் தமிழ்ப் பகுதிகளுக்கு காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகா வுக்குப்பின் அவரது புதல் வர் திரு. டட்லிசெனநாயகா தான் தேசிய நோக்குடன் விஜயஞ்செய்த முதல் பிரத மர் என்பது இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்குப் பின் பதவிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதமர்களில் ஒருவ ரான ஸ்ரீமதி பண்டாரநா யகா தேர்தல் சமயத்தில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயஞ் செய்த போதிலும் அவர் சார்பாக வாக்காளர் களைத் திருப்புமுகமாகவே இந்த விஜயத்தை மேற் கொண்டார் என்பதும் அர சியல் வட்டாரங்களில் சுட் டிக்காட்டப்படுகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

ஐ. நா. வின் 21-வது ஆண்டுதினம்

பலநாடுகளில் கொண்டாட்டம்

கொழும்பு, ஞாயிறு

ஐக்கிய நாடுகள் ஸ்தா பனத்தின் 21-வது ஆண்டு தினம் இன்று பல நாடுகள் கொண்டாடப்பட்டது

1955-ம் ஆண்டில் ஐ நா ஸ்தாபனம் ஆரம்பிக்கப் பட்டபோது அதில் சில நாடுகள் அங்கம் வகித்தன இப்போது 117 நாடுகள் அங்கம் வகிக்கின்றன விரை வில் 118-வது நாடாக கயானு சேரவிருக்கிறது

ஐ நா ஸ்தாபனம் ஆரம் பிக்கப்பட்டபின் ஆசியா விலும், ஆபிரிக்காவிலும் காலனி நாடுகள் விரை வாக சுதந்திரம் அடைந்த தால் இந்த எண்ணிக்கை இரட்டிப்பைக் கடந்தது ஆனால் இன்றும் சில நாடு கள் குறிப்பாக ஆபிரிக்க நாடுகளில் சில விடுதலை அடைய வேண்டியுள்ளன போராத்துக்கேய காலனி கள் அவற்றில் முக்கியத் வம் வகிக்கின்றன

(5-ம் பக்கம் பார்க்க)

அப்போதிக்கரியின் மருந்து கொடுக்கும் "வித்தை"

மந்திரி நேரில் கண்டார்

கொழும்பு, ஞாயிறு

சுகாதார மந்திரி திரு. எம். டி எச் ஜெயவர்த்தனு அண்மையில் ஒரு பொதுக் கூட்டத்திற்குப் பிரயாணம் செய்கையில் கொட்டியா கும்பற என்னுமிடத்திலு ள்ள அரசினர் வைத்திய சாலையில் பெருமளவிற்கு நோயாளிகள் குழுமியிருக் கக்கண்டு அதுசம்பந்தமாக விசாரித்தபொழுது அந்த மருந்துச்சாலையில் கடமை யாற்றும் அப்போதிக்கரி மருந்து கொடுப்பதற்காக நேரமாகியும் வரவில்லை யென்றும் அப்போதிக்கரி தனது வீட்டிலேயேவைத்து நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கின்றார் என்பதும் மந்திரிக்கு தெரியவந்தது

மந்திரி உடனடியாக அப் போதிக்கரியின் வீட்டிற்குச் சென்றபொழுது அங்கேயும் நோயாளிகள் நின்று மருந்து பெற்றுக் கொண்டிருப்பதை நேரில் கண்டார். உடனடி யாக அப்போதிக்கரியை வைத்தியசாலைக்கு சென்று மருந்தை வழங்கும்படி உத தரவிட்டு மந்திரி அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக் கும்படியும்உத்தரவிட்டார்

பாணந்துறை ஆஸ்பத்திரி எக்கிக்குள் வசிக்கவேண்டி ய வைத்திய அதிகாரி ஒருவர் அங்கு இல்லாது கொழும்பிலிருந்து பாது துறைக்கு பிரயாணம்செய் வதை தற்பொழுது சுகா தார திடீர் பரிசோதனைக் குழுவினர் கண்டு பிடித்து மந்திரியின் கவனதற்கு கொண்டுவந்துள்ளனர். இது தொடர்பாக மேலும் விசா ரிக்கை மேற்கொள்ளப்படவி ருக்கிறது.

"ஆங்கில அறிவுள்ள ஜூரர்களை நியமிக்கவும்"

நீதியரசர் உத்தரவு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண அரசாங்க அதிபராக திரு. எம். ஸ்ரீகாந்தா கடமையாற்றிய காலத்தில் ஜூரிப்பட்டியலை பற்றிக் கவனித்து நீதி செய் யக்கூடிய அளவில் ஆற்றல் உள்ள ஜூரிமார்களைத் தெரி ந்தெடுத்து அனுப்பினர். ஆனால் நான் தற்போதைய அரசாங்க அதிபரைக்குறை சொல்லவில்லை. அவருக்கு ஜூரிமார்களைத் தெரிவு செய்ய ஆலோசனை கூறிய காரியாதிகாரிகளின் கவலை யீனத்தைப் பற்றியே குறிப் பிடவேண்டியிருக்கிறது.'

வடபகுதி அஸைஸ் விசா ரணை நேற்றுக்காலை ஆரம்ப மானபோது நீதிபரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம் பையாகியூ. ஸி, மேற்கண் டவாறு குறிப்பிட்டார்,

நேற்றைய விசாரணை யின் போது சத்தியப்பிரமா ணத்தை ஆங்கிலத்தில் திரும் பச் சொல்லமுடியாது. கஷ் டப்பட்ட மூன்று ஜூரிகளை நீதியரசர் ஜூரிசபையிலிரு ந்து நீக்கிவிடுமாறு உத்தர விட்டார். ஜூரிசபையிலிரு ந்து மூன்று ஜூரிமார் நீக் கப்பட்டுவிட்டதால், சத்தி யப் பிரமாணம் மூன்று தடவை நடைபெறவேண்டி யிருந்தது.

நீதியரசர் மேலும் குறிப் பிட்டதாவது:-

சத்தியப்பிரமாணத்தைத் திரும்பச் சொல்வதற்கு ஆங்கிலத்தில் ஆறுவிலா தவர்களைத் தெரிவுசெய்து அனுப்புவது பற்றி 10 வரு டத்திற்கு முன்னிருந்தே குறிப்பிட்டுக்கொண்டுவந்தி ருக்கிறேன். அது கவனிக்கப் பட்டதாகத் தெரியவில்லை

இப்பதிவுகால விசாரணை யின் போது பல தடவைக ளில் கேட்கும் சக்திகுறை ந்த ஜூரிகளையும், சத்தியப் பிரமாணத்தை ஆங்கிலத் தில் திரும்பச் சொல்லமுடி யாதவர்களையும், ஆங்கிலத் தில் நடைபெறும் விசா ரணையைக் கவனித்து செய லாற்ற இயலாதவர்களையும் வேண்டா வெறுப்பான முறையில் தெரிவுசெய்து அனுப்பியிருந்ததைக் கவ னிக்கக்கூடியதாயிருந்தது

ஜூரிமார் ஆங்கிலத்தில் நடைபெறும் விசாரணையை

(5-ம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவு

கொலை வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள்

முல்லைத்தீவு கொலைவழக் கில் எதிரிவிடுதலை செய்யப் பட்டார். விசாரணை நடுவில் ஜூரிசபையினர்தனிமையில் சந்தித்து மந்திராலோசனை செய்தபின் எதிரி எக்குற்றச் சாட்டிலும் குற்றவாளியல்ல வென ஏகமனதாகத் தெரி வித்ததைத்தொடர்ந்து நீதி பரசர் எதிரியைவிடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

முல்லைத்தீவு கொலைவழ க்கு நேற்றுக்காலைவடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச் டபி ள்யு தம்பையா கியூ. சி. முன் னிலையில் விசாரணைக்குஎடுத் துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ந் திகதி முல்லைத்தீவில் ஆறுமு கம் என்பவரை அவரது மகன் செல்வராசா கொலை செய்ததாகக் குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வகேட் ரி. கணேசலிங்கம், புறக்ரர் தங்கையாகிங்கம் யோகநாத னின் ஆலுசரணையுடன் ஆஜராஞர். எதிரிக்காக அர சாங்கத்தால் அட்வகேட் எஸ் ஸ்ரீநிவாசன் நியமிக்கப் பட்டிருந்தார்.

தாமோதரி பொன்னையா சாட்சியமளித்தபோதுகூறிய தாவது: எதிரியையும் இறந் தவரையும் எனக்குத் தெரி யும். எதிரி இறந்தவரின் மகன் அவர்கள் தொட்டிலு க்கு அருகில் நின்றது, அரு கிலென்று பார்த்தபோது அது மனித உருவம் என்பது தெரிந்தது. யார்என்று நான் கேட்க 'நான்தான்' என்று அந்த உருவம்பதிலளித்தது. மீண்டும் யார் என்று நான் கேட்டதும், 'நான் செல்வ ராஜா' என்று அந்தஉருவம் கூறியது. செல்வராசா தான் எதிரி 'ஏன்நிற்கிறுய்'என்று நான் கேட்டேன். எதிரி கொஞ்சநேரம் ஒன்றும் பேசாது யோசித்துக்கொண் டிருந்தார். என்னயோசிக்கி றுய் என்று கேட்டேன்,

கோபத்தினால் தனதுதகப் பனாரைக் கோடரியால் வெட்டிக் கொலைசெய்து

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிவினாப்பரம்

தேவை

நெசவுத் தறிகள்

9 நெசவுத் தறிகள் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: லெட்சுமி மரக்காலை, ஊர்காவற்றுறை. ஏ. பசுபதி. 596

விற்பனைக்கு

தமிழ் தட்டச்சு

தமிழ் (Remington Std) தட்டச்சு யந்திரம் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி. 598

சென்னை நாதசுரக்கல்லூரி திருவையாறுக்கு மாறுகிறது

தஞ்சாவூர், ஜூன் 26

சென்னையிலுள்ள நாதசுரக்கல்லூரியை சங்கீதசபா பிரதாயத்திற்குப் பெயர் போன திருவையாற்றுக்கு மாற்றுவதென முடிவுசெய்யப்பட்டிருப்பதாக முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினார்.

கல்லூரிகள் சரியாக வேலைசெய்யவில்லை என்று புகார்கள் வந்தது ஒருபுறமிருக்க, திருப்திகரமாக வேலைசெய்யாததால் அதை வேறிடத்துக்கு மாற்றுவதைத் தாமே முடிவுசெய்ததாயும் அவர் கூறினார்.

அரியாலை சடலம் விசாரணை நீடிக்கிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

சில தினங்களுக்கு முன்னர் அரியாலையில் அநாதரவாகக் கிடந்த அழுகிய சடலம் பற்றி தகவல்கள் அறிவதற்கு யாழ்ப்பாணம் பொலிஸ்சேர்ந்த கான்ஸ்டபிள் கே. வி. கப்பிரமணியம், தம்பிராசா ஆகிய இருவரும் தீவுப்பகுதிகளுக்கு விரைந்துள்ளனர். இவர்களை யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன்டன் மகேந்திரன் அனுப்பிவைத்துள்ளார்.

புங்குடுதீவு, பூநகரி, கரம்பன், மண்டைதீவு ஆகிய பகுதிகளுக்கு இவர்கள் சென்று துப்புத்துலக்குவர். (ந. நி.)

லெனின்கிராடில் டிகால்

லெனின்கிராட், ஜூன் 26

பிரெஞ்சு அதிபர் டிகால் இங்கு வந்து சேர்ந்தபோது சோவியத் மக்கள் அவருக்கு ஆரவாரமான வரவேற்பு அளித்தார்கள்.

நேற்று கஸாக்கிஸ்தானில் ஆளில்லா செயற்கைச் செய்மதி ஒன்று அனுப்பப்பட்டதை டிகால் நேரடியாகப் பார்வையிட்டார். டிகாலுடன் பிரஸ்னேவ், பொட்கோர்னி, கொஸிஜின் ஆகிய சோவியத்தின் முப்பெருந் தலைவர்களும் வந்திருந்தனர்.

பாலில் தண்ணீர் கலந்து விற்றனராம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் பொது மக்கள் பாவனைக்காகவிற்பனை செய்யப்படும் பசுப்பாலில் தண்ணீர் கலந்ததாகவும், சுகாதாரத்திற்கு ஒவ்வாததாகவும் இருப்பதாக சுகாதாரப் பகுதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாநகரசபைஉணவுப்பரிசோதகர் திரு. இராஜரத்தினம் யாழ்ப்பாண நகரின் முக்கிய பகுதிகளில் நடத்திய திடீர் பரிசோதனையின்போது 24 பேர்களிடமிருந்து பாலைக் கைப்பற்றி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதிக் கூடாக இரசாயனப் பரிசோதகரின் ஆலோசனைக்காக சமர்ப்பித்திருந்தார்.

பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட 24 பேர்களில் வசமிருந்த பாலில் 12 பேர் வசமுள்ள பால் பொதுமக்களின் பாவனைக்குதவாதவைகளாக இருப்பதாகவும், இதற்காக சம்பந்தப்பட்டவர்களின் வழக்குகள் படிப்படியாக தொடரப்படும் என்றும் தெரியவருகிறது.

முதலாவது வழக்கில் கொக்குவிலைச் சேர்ந்த பொ அப்புத்துரை பொது மக்களின் பாவனைக்காக எடுத்துச் சென்ற பாலில் 28 வீதம் தண்ணீர் கலந்திருந்ததாகக் கூறி எதிரிக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. இராஜரத்தினம் 75 ரூபா அபராதம் விதித்தார், இவ்வழக்கில் யாழ்ப்பாணம் மாநகரசபையின் சார்பில் உணவுப் பரிசோதகர் திரு. த. இராஜரத்தினம் ஆஜராகி நடத்தினார். (ந. நி.)

கோவில் உண்டியலை கடத்த முயன்றார்களாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம்கச்சேரிவீதியிலுள்ள கற்பகப் பிள்ளையார் கோயில் உண்டியலை எடுத்துக் கொண்டு செல்ல முயன்ற நால்வரில் மூவர் கையும் மெய்யுமாகச் சிக்கிக் கொண்டனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் திரு. அலுவிகார தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினரும் றோந்து சுற்றிக் கொண்டு வருகையிலேயே இவர்கள் பிடிபட்டனர். நால்வரில்ஒருவர்ஓடிஒளித்துக்கொண்டுவிட்டாராம். மூவர் பொலிசாரிடம் சிக்கிக்கொண்டனர்.

பொலிஸார் நான்காவது

விளம்பரம்

அறிவித்தல்

ஸ்ரீ நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் தெற்கு கிழக்கு வீதியிலும், பாலத்துக்கு தெற்குப்புறமாகவுள்ள முதலாவது தம்பையா சத்திரம், தண்ணீர்ப்பந்தல் உரிமையாளரின் முக்கிய அறிவித்தல்: இத்தால் பொதுமக்கள் அறிய வேண்டியது மேற்படி (சத்திரம்) தண்ணீர்ப்பந்தலுக்கு எவராகுதல் தருமம் செய்யும்படி கேட்டால் கொடுக்க வேண்டாம் என்றும் நாங்கள் மேற்படி தண்ணீர்ப்பந்தலுக்கு பொது மக்களிடமிருந்து எதுவித பணமும் வசூலிப்பதில்லை என்பதையும் தெரிவிக்கிறேன்.

இங்ஙனம் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் வீதி, தம்பையா சத்திரம் தண்ணீர்ப்பந்தல் உரிமையாளர்: க. த. சோமசேகரம் சித்த. ஆயுர்வேத வைத்தியர், நயினாதீவு. 628

உத்தியோகத்தர் தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத்தமிழ் ஆசிரியர் சங்கக்கூட்டம் யாழ். கிளையின் வருடாந்தக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. சுப்பிரமணியம், உபதலைவர்கள்: திருவாளர்கள் வே. கந்தையா, க. சுப்பிரமணியம், காரியதரிசி: திரு. இ. பொன்னையா, உபகாரியதரிசிகள்: திருவாளர்கள்: வே. பரமநாதன், ச. நாகநாதன், தனாதிகாரி திரு. க. சிவசிதம்பரம், உபதனாதிகாரி: திரு. அ. சுப்பிரமணியம். எண்மர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

275 பேர் கைது

பங்களூர், ஜூன் 26

மைசூர் - மகாராஷ்டிரா கிளர்ச்சியை ஒட்டி நேற்று ராஜ்யத்தின் பல இடங்களில் 275 பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

பேர்வழியைப் பிடிப்பதில் இப்போதுதீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (ந. நி.)

29 புதன் முதல்

திங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)

ஜெயலலிதா — ஸ்ரீகாந்த்
ஆஷா, நிர்மலா
மற்றும் பலர் நடிக்கும்

"வெண்ணிற ஆடை"

கடைசி வாரம்

திங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (அம்பாறை)

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடிக்கும்
தெய்வத்தாய்

நியூ காலிங்கன் (இணுவில்)
தினசரி 6.30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி நடித்த
நவராத்திரி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
ஆனந்தன் • ராஜஸ்ரீ நடித்த
செங்கமலத் தீவு

REGAL—JAFFNA
NOW SHOWING
Alfred Hitch Cock's
SABOTEUR
(Thrilling Action Story)

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக் கட்டிட நிதிக்காக
அமெரிக்கா, பிரிட்டன், சிங்கப்பூர், யப்பான்
ஆகிய நாடுகளில் பரதநாட்டியம், குச்சிப்புடி, ஆந்திர நடனங்கள் ஆகியவற்றை நிகழ்த்திப் புகழீட்டிய

பிரபல தென்னிந்திய நடனமணிகள்
தேஜஸ்வினி— பங்கஜம்
குழுவினர் அளிக்கும்
பரத நாட்டிய விருந்து

28—6—66
செவ்வாய்க்கிழமை
மாலை 6 மணியளவில்
சாவகச்சேரி இந்துக்கல்லூரி சுப்பிரமணியம் அரங்கிலும்

30—6—66
வியாழக்கிழமை
மாலை 6 மணியளவில்
யாழ்ப்பாணம்
நகரமண்டபத்திலும்

2—7—66 சனிக்கிழமை மாலை 6 மணியளவில்
பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும்
மேற்படி கல்லூரிப் பழையமாணவர்களின்
ஆதரவில் நடைபெறவிருக்கின்றது.

நுழைவுக் கட்டணம். ரூபா 25, 10, 5, 3
மாணவர்களுக்கு: ரூபா 2.

வர்த்தகக் குறியையும் தயாரிப்பு உரிமைகளையும்
அத்துமீறுபவர்களுக்கு
எச்சரிக்கை

ராதா பெபியூமரி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)
உரிமையாளர்களால்

ராதா & டபிள்பெல் (Double Bell) என்ற வர்த்தகக்குறியின்கீழ் தயாரிக்கும் பிரசித்திபெற்ற சகலரோக நிவாரணி ராதா மின்சார மருந்து ராதா பெபியூமரி அன் ராதா புறடக்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரித்து, அவர்களின் ஏகவிநியோகஸ்தர்களாகியஎஸ். சுப்பிரமணியம்அன்கொம்பனியாரால்விற்பனைசெய்யப்படுகிறது ஆமோகமான விற்பனையைக்கண்டு சிலர் போலி மருந்துகளைத் தயாரித்து இதே மாதிரியான பெட்டிகளில் அடைத்து விற்பனைசெய்து வருவது எங்கள் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தப் போலித் தயாரிப்புகள் அடைக்கப்பட்டுள்ள அட்டைப் பெட்டியும் போத்திலும் தோற்றத்தில் அசல் ராதா மின்சார மருந்துபோலவே காணப்படுகிறது. மிகவும் பாரதூரமான, சட்டவிரோதமான எமது வர்த்தகக் குறியையும், தயாரிப்பு உரிமைகளை உபயோகிக்கும் போலி வர்த்தகர்களை இவ்விதமான சட்டவிரோத செயலில் மேற்கொண்டும் ஈடுபடாமல் இருக்கும்படி இத்தால் எச்சரிக்கிறோம்.

பொதுமக்கள் ராதா மின்சார மருந்து வாங்கும்போது ராதா & டபிள் பெல் (Double Bell) வர்த்தகக் குறிகளை கவனித்து வாங்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
ராதா பெபியூமரி அன் ராதா புறடக்ஸ்
ஸ்தாபனதாரின் ஏக விநியோகஸ்தர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1967 பிப்ரவரி 19-ம் திகதி இந்திய

பொதுத்தேர்தல் ஆரம்பம்

26-ம் திகதிக்குள் சகல முடிவுகளும் அறிவிக்கப்படும்

உலகத்தின் மிகப்பெரும் தேர்தல் நடத்த ரூ. 67 கோடி செலவு!

பம்பாய், ஜூன் 26

இந்தியாவின் அடுத்த பொதுத்தேர்தல் 1967-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ம் திகதி முதல் 6-ம் திகதி வரை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பிரதம தேர்தல் கமிஷனர் திரு. கே. வி. கே. சுந்தரம் இத்தகவலை பம்பாயில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இப்போது இந்த அடிப்படையில் ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன என்றும், விபரங்கள் பின்பு அறிவிக்கப்படும் என்றும் கமிஷனர் கூறினார்.

இரு தினங்களில் தேர்தல்கள் முடிவுறும் என்றும், இரண்டு நாள் இடைவெளிக்குப் பின்பு வாக்குச்சீட்டுக்கள் எண்ணப்படும் என்றும் கூறிய திரு. சுந்தரம், கடைசி மூன்று தினங்களில் சகல முடிவுகளும் அறிவிக்கப்படும் என்றார்

தேர்தல் ஜாபிதா தயாரிப்பது உட்பட, அடுத்த தேர்தலுக்கு 67 கோடி ரூபாய் செலவு பிடிக்கும் என திரு. சுந்தரம் கூறினார்.

"உத்தேச பஞ்சாப் எல்லைப் பிரிவினை தேர்தல் வேலைகளை ஓரளவு பாதித்திருக்கிறது. பஞ்சாப், ஹரியானா சட்டசபை ஸ்தானங்களின் எண்ணிக்கை பாரிவிமெண்டில் தீர்மானிக்கப்படும்" என்றும் அவர் குறிப்பிட்டார்,

அந்தமான், பினிக்கோய் லட்சத்தீவுகள், டொண்ட்ரா, நாகர்ஹவேலி ஆகிய மத்திய நிர்வாகத் தீவுகளிலும் முதல்தடவையாகத் தேர்தல்கள் நடத்தப்படும் என்றார் திரு. சுந்தரம்.

பொதுத்தேர்தலுக்கு முன்கோவாவில் தனியாக தேர்தல் நடத்தப்படமாட்டாது என்றார் அவர்.

உலகிலேயே மிகப்பெரிய தான இந்தியத் தேர்தலில் சென்றமுறை 20 கோடிக்கு மேற்பட்ட வாக்காளர்கள் இருந்தனர். இம்முறை வாக்காளர் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது.

உலகம் சுற்றும் இலங்கையர்

லண்டன், ஜூன் 26

51வயதான மஹிந்தா என்ற இலங்கையர், தனது உலக சுற்றுப்பிரயாணத்தில் கமெரூன் வந்திருக்கிறார். கடந்த 13 ஆண்டுகளாக உலகம் சுற்றிவரும் அவர் இதுவரை ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங்களில் 94 நாடுகளில் சஞ்சரித்திருக்கிறார். இன்னும் 40 நாடுகளுக்குத் தாம் செல்லவேண்டியுள்ளதென்றும், இதற்கு 4 வருட்ங்கள் பிடிக்கும் என்றும் அவர் கூறினார். தமது சுற்றுப்பிரயாணத்தின் இறுதியில் புத்தகம் ஒன்றை வெளியிட இருப்பதாக அவர் கூறினார்.

கயானுவில் அவசரகாலநிலை

ஜார்ஜ்டவுன், ஜூன் 26

பிரிட்டிஷ் கயானுவில் தொடர்ந்து 5வது தடவையாக அவசரகாலச்சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. இனக்கலவரத்திலிருந்து மக்களைப் பாதுகாக்குமுகமாகவே இந்நடவடிக்கை எனப் பிரதமர் பேர்ஹாம் தெரிவித்தார்.

கூட்டணியை வலுப்படுத்த ராஜாஜி, அண்ணு வேண்டுகோள்

தேர்தல் வெற்றியில் நம்பிக்கை

சென்னை, ஜூன் 26

அடுத்து வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அரசாங்கத்தை கவிழ்க்கும் பொருட்டு, தமிழ் நாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் முக்கூட்டணியை வலுப்படுத்து மாறு சுதந்திரக்கட்சித் தலைவர் ஸ்ரீ சி. ராஜகோபாலாச்சாரியும், தி.மு.க. தலைவர் ஸ்ரீ அண்ணுதுரையும் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

மெஜாரிட்டி ஸ்தாபனங்களுடன் தேர்தலில் வெற்றி கிடைக்கும் என்று ஸ்ரீ அண்ணுதுரை திட நம்பிக்கை தெரிவித்தார். ராஜ்யத்தில் சமீபத்தில் தாம் சுற்றுப் பிரயாணம் செய்தபோது, கூட்டணி நன்கு வலுப்படுத்தப் பட்டுள்ளது என்ற எண்ணம் ஏற்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

கூட்டணியைக் குலைக்கவும் வகுப்புவாத அடிப்படையில் வோட்டுக்களைப் பிரித்து போகச் செய்யவும் காங்கிரஸ் பணத்தையும் அதிகாரத்தையும் கொண்டு முயற்சிக்கலாம் என்று ராஜாஜி எச்சரித்தார்.

மேற்கு மாம்பலத்தில் தி.மு.க. தேர்தல் கூட்டமொன்றில் ராஜாஜி பேசினார். "தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக காங்கிரஸ் மந்திரிகள் ராஜினாமாசெய்யவேண்டுமென்ற சுதந்திரக்கட்சி கோரிக்கை புறக்கணிக்கப்பட்டு விட்டது. இந்தக் கோரிக்கைக்கு ஸ்ரீ காமராஜ் ஒருபோதும் இணங்கமாட்டார். ஏனெனில், பதவியிலிருந்து விலகினால் காங்கிரஸ் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு விடும் என்பது அவருக்குத் தெரியும். திட்டமிட்டபடி அடுத்த பெப்ரவரியில் பொதுத் தேர்தல் நடைபெறுமா என்பது சந்தேகமாயிருக்கிறது" என்று ராஜாஜி மேலும்கூறினார்.

ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதால், நாட்டின் கௌரவமும், தன்மானமும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டு விட்டது என்றும், வெளிநாடுகளிலிருந்து இவ்வளவு கடன் பெற்ற நாடு உலகில் வேறு எதுவுமில்லை என்றும் ராஜாஜி குறிப்பிட்டார்.

அதிகாரத்திலிருந்து காங்கிரஸை எவ்வாறு வெளியேற்றுவது என்பதை எதிர்க்கட்சிகள் தற்போது சிந்திக்க வேண்டும் என்று ஸ்ரீ அண்ணுதுரை கூறினார். தேர்தலில் காங்கிரஸ் ஏன் தோற்கடிக்கப்படவேண்டும் என்பதை விளக்க இது தருணமல்ல என்றார். ராஜாஜியுடன் சேருவதென்று நான் அவசரப்பட்டு முடிவுசெய்யவில்லை. யாருடனும் நான் எளிதில் சேர்ந்துவிட மாட்டேன். நான் யாருடனாவது சேர்ந்தால் உறவை எளிதில் முடித்துக்கொள்ளவும் மாட்டேன்" என்று ஸ்ரீ அண்ணுதுரை பலத்த கரகோஷத்துக்கிடையே குறிப்பிட்டார்.

கூட்டணிக்கான காரணத்தை அவர் விளக்குகையில், தேர்தலில் வெற்றி பெறுவதால் தாமோ அன்றி ராஜாஜியோ அனுகூலமடையப் போவதில்லை என்றுகூறினார் ராஜாஜி அவரது பொதுவாழ்க்கையில் எத்தனையோ சாதித்தாகிவிட்டது. புதிதாகப் பட்டமோ அன்றிப்பதவியோ தி.மு.க. அவருக்குத் தரத்தேவையில்லை. அதேமாதிரி தி.மு.க. தலைவர்களும் மந்திரிகளாவதற்குமுன்பே பிரபலமாகிவிட்டனர். 10 ஆண்டுகளுக்குள் தி.மு.க. பதவியிலிருந்து காங்கிரஸை விரட்டுமளவுக்கு வளர்ந்துவிட்டது. முக்கூட்டுஅணியினால் அனுகூலம் அடையப்போகிறவர்கள் வாக்காளர்களே எனவே வாக்காளர்கள் தங்கள் நலனை உத்தேசித்து காங்கிரஸுக்கு எதிராக வோட்டளிக்கவேண்டும்

சுமார் 25ஆயிரம் தி.மு.க. வினர் கடந்த காலத்தில் அமைதியான ஆர்ப்பாட்டங்களின்போது கைது செய்யப்பட்டனர். அரசியல் காரணங்களுக்காகக் குறைந்தபட்சம் 20 தி.மு.க. தொண்டர்கள் கொல்லப்பட்டனர். அத்தியாவசியப் பண்டங்களின் விலையேற்றம், கடும் வரிச்சுமை ஏற்கனவே உள்ளன. இது போதாதென்று ரூபாய்மதிப்பு குறைக்கப்பட்டுள்ளது.

அடுத்ததேர்தலில் அதிகாரத்திலிருந்து காங்கிரஸைக் கவிழ்க்க நாட் மக்கள் தற்போது தயாராகிவிட்டனர். தங்கள்சொந்தநலனை உத்தேசித்து காங்கிரஸுக்கு எதிராக வோட்டளிப்பது மக்கள் கடமை" என்று ஸ்ரீ அண்ணுதுரை தொடர்ந்து குறிப்பிட்டார்.

காங்கிரஸ் கண்டனத்தை அடுத்து

சுகர்ணோ கூட்டிய உயர் சபையின் அவசரக் கூட்டம்

தான் ஒப்பமிடாததால் மலேஷிய எதிர்ப்பு இன்றும் இருக்கிறதாம்

ஜாகர்த்தா, ஜூன் 25

இந்தோனேஷிய மக்கள் ஆலோசனை காங்கிரஸில் தமது 15 ஆண்டு கொள்கைகளை ஆதரித்து நிகழ்த்திய உரையை அங்கத்தினர்கள் கண்டித்ததையடுத்து ஜனாதிபதி டாக்டர் சுகர்ணோ, 6 பேரடங்கிய உயர் நிர்வாக சபையின் அவசரக்கூட்டம் ஒன்றை நேற்றிரவு நடத்தினார்.

ஜனாதிபதியின் போகார் அரண்மனையில் நாலரை மணி நேரம் இக்கூட்டம் நடைபெற்றது. கூட்டமுடிவிற்குப் பின் கோபாவேசத்துடன் வெளியே வந்த சுகர்ணோவை நிருபர்கள் அணுகியபோது, "பொறுத்திருந்து பாருங்கள்" என்றார் அவர்.

மலேஷியாவுக்கு சமாதான ஒப்பந்தத்தில் தாம் இன்னும் கைச்சாத்திடவில்லை என்றும், எனவே மலேஷிய எதிர்ப்பியக்கம் இன்றும் இருந்துவருவதாயும் டாக்டர் சுகர்ணோ தெரிவித்தார்.

வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக் இதுபற்றிக் குறிப்பிடுகையில், இருதேச வெளிநாட்டு மந்திரிகளும் கையொப்பமிட்ட பாங்காக் ஒப்பந்தம் செல்லுபடியாகும் எனக் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் 65,000 இந்தோனேஷிய மாணவர்கள் ஜாகர்த்தாவில் காங்கிரஸ் கட்டிடத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

ஜனாதிபதி சுகர்ணோவிடமிருந்து "ஆயுட்கால ஜனாதிபதி" "புரட்சியின் பெருந்தலைவர்" என்ற பட்டங்களைப் பறிக்கும்படி கோரும் தீர்மானம் ஒன்றை ஜெனரல் நசுதியானிடம் அவர்கள் கையளித்தனர்.

திறமையான மந்திரிசபை ஒன்றை அமைக்கும்படி ஜெனரல் சுகார்ட்டோவையும் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

சிறைதப்ப முயன்ற அமெரிக்க "சட்டவிரோதி"

கல்வீச்சில் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டார்

சென்னை. ஜூன் 26

இந்தியாவுக்குள் சட்டவிரோதமாகப் பிரவேசித்ததாயும், ஏமாற்று, மோசடி ஆகியவற்றில் ஈடுபட்டதாயும் குற்றஞ்சாட்டப்பட்டு, பிரதம மாகாண மாஜிஸ்திரேட்முன் விசாரணைக்குள்ளாகியிருக்கும் அமெரிக்கர் டேனியேல் வால்காட்டும், பிரெஞ்சுக்காரர் டோன்சேயும் நேற்று சிறையிலிருந்து தப்ப முயன்ற ஒரு முயற்சி தொற்கடிக்கப்பட்டது என பொலிஸ் அறிக்கை ஒன்று கூறியது.

மறைத்து வைக்கப்பட்ட ஆயுதம் ஒன்றின்மூலம் கம்பிகளைத் துண்டித்து அவர்கள் வெளியேற முயன்றனர். ஆனால் சிறைக்காவலர்கள் எச்சரிக்கை விடுத்ததையடுத்து பொலிசார் அவர்களைக் கல்லால் அடித்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். இதன் காரணமாக கைதிகள் காயமடைந்தனர் என அறிவிக்கப்பட்டது.

நியூயோர்க் சென்றார்

பம்பாய், ஜூன் 26

அமெரிக்காவில் 2 வாரம் தங்கும்பொருட்டு இந்திய ரயில்வே மந்திரி திரு. எஸ். கே. பட்டீல் இன்று பம்பாயிலிருந்து நியூயோர்க் புறப்பட்டார்.

"திரிபுவாதிகளும், ஏகாதிபத்தியவாதிகளும்"

—சூ பாய்ச்சல்

டிராஞ், ஜூன் 26

சீனப் பிரதம மந்திரி திரு. சூ-என்-லாய் அல்பேனியாவில் அளிக்கப்பட்ட ஒரு வரவேற்பில் "நவீன திரிபுவாதி"களையும் "அமெரிக்க ஏகாதிபத்திய வாதி"களையும் சாடினார்.

ஏகாதிபத்திய, திரிபுவாதிகளுக்கு எதிரான சீனாவின் போராட்டம் கடைசிவரை ஓயாது என்றார். சூ சீனாவை அமெரிக்கா சுற்றிவளைக்க முயல்கிறதென்றும் அவர் குற்றஞ்சாட்டினார்

இதற்கிடையில் சீனாவுக்கும் மங்கோலியாவுக்குமிடையேயான எல்லைத் தகராறுகள் தீவிரமடைந்திருப்பதாய்த் தெரிகிறது.

கடந்த ஆண்டு இந்த நெருக்கடி ஆரம்பமாகியது. மங்கோலியத் துருப்புக்கள் சீன பகுதியில் ஊடுருவியதாயும் சீனர் ஒருவரைக் கடத்திச் சென்று கொடுமைப்படுத்தியதாயும் சீனா ஆட்சேபக் குறிப்பொன்றை மங்கோலியாவுக்கு அனுப்பியிருக்கிறது.

ஆனால் சீனர்கள் தங்கள் நாட்டுக்குள் உளவாளிகளை அனுப்பிவிடுவதாய் மங்கோலிய வெளிநாட்டு மந்திரி கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

எல்லா உயிர்களையும் புனிதமாக மதிக்கும் தெய்வீக அன்புதான் இன்று உலகுக்கு மிக அவசரமான முக்கிய தேவையாகும். பல சமய தீர்க்க தரிசிகளும் ஞானிகளும் உபதேசித்தது மிதுதான். இத் தெய்வ நீதியை நாம் நிறை வேற்றவேண்டும். இன்றேல் நமக்கு நாசம்தான்.

—வண. மாண்டஸ்.

ஈழநாடு
EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389
யாழ்ப்பாணம் பராபவ ஆனி மீ 13 (27-6-66)

கல்முனையில் பிரதமர்

பிரதமர் டட்லி சேன நாயகா கல்முனை மகா நாட்டிலே கலந்து கொண்டு, அங்கு பேசியவை பொதுவாக இங்குள்ள தமிழ்ப்பேசும் மக்களின் மனதைக் கவர்ந்து விட்டதுடன், அவர் ஓர் அரசியல்வாதியாக இன்றி அரசியல் ஞானி என்பதையும் காட்டுவதாகவுள்ளது.

இந்நாட்டில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற தமிழ்பேசும் மக்களின் ஒத்துழைப்புத் தேவைப்பட்டதுபோல் நாட்டின் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களது ஒத்துழைப்பு தேவைப்படுகிற தென்று சரியாக எடுத்துக் கூறினார் பிரதமர். இச்சமயம் ஒரு விஷயத்தை நினைவூட்ட விரும்புகிறோம். சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாகக் கேட்டதால்தான் நாட்டுக்கு அரசியல் சுதந்திரமும் கிடைக்கமுடிந்தது. தமிழரைத் திருப்திப்படுத்த, தமிழும் ஓர் அரசாங்க மொழியாக சிங்களத் தலைவர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டனர். ஆனால் நாடு விடுதலையடைந்த பின், தமிழருக்கு அளிக்கப்பட்ட மொழி உரிமை பலாத்காரமாகப் பறிக்கப்பட்டது. அதனால் விளைந்த கேடுகள் கொஞ்சமல்ல. தனிச் சிங்கள மசோதாவை நிறைவேற்றுகையில், திரு. டட்லி ஐ. தே. கட்சியின் தலைமைப்பதவியிலிருந்து ஒதுங்கி இருந்தாராகையால், அந்தக் குற்றத்துக்கு தனிப்பட்ட முறையில் அவர் உடந்தையன்று. என்றாலும் அன்று தமிழருக்குச் செய்யப்பட்ட பெரிய அநீதியையும், தமிழ்த் தலைவர்கள் ஐ. தே. கட்சியை விட்டு விலகநேரிட்டதையும்பற்றி, அவர்மிக மனம் நொந்து கண்ணீர் விட்டது பகிரங்க ரகசியம். அத்தவறுகளுக்கெல்லாம் பிராயச்சித்தம் செய்ய அவருக்கு இப்போது சந்தர்ப்பம் வாய்த்துள்ளது.

நாடு அரசியல் விடுதலை அடைந்துள்ள தெனினும் பொருளாதார விடுதலையை இன்னும் அடையவில்லை. இதற்கும் தமிழ் பேசும் மக்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது என்று பிரதமர் பகிரங்கமாக தமிழருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். தன்மானத்துடன் ஒத்துழைக்கத் தமிழர் என்றும் தயார். நாட்டு நன்மையில்தான் தமிழரின் நன்மையும் அடங்கியுள்ளது.

"இந்த ஒத்துழைப்பும் ஒருமைப்பாடும் தற்காலிகமானதாக இல்லாமல் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்பதே என் ஆசை. இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் "இது என் சொந்த நாடு" என்று பூரிப்போடு சொல்லக்கூடிய நிலைமை உருவானால் நான்மகிழ்ச்சியோடு இறப்பேன்" என்று பிரதமர் கூறி, மக்களிடையே ஐக்கியம் நிலவ வேண்டியது மிக அவசியமென்றும், இன்றேல் எல்லா சுதந்திரங்களும் பறி போய்விடுமென்றும் அவர் எச்சரித்துள்ளார். இதில் அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் உள்ளத்திலிருந்து வந்தவை; அரசியல் ஞானம் நிறைந்தவை. ஆகவே அவரது தலைமையில் நடைபெறும் தேசிய அரசாங்கம், தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, நாட்டின் பொருளாதார விடுதலைக்கு எல்லா முயற்சிகளையும் செய்யுமென்று நம்புவது மிகையல்ல.

ஐ. நா: 21 வயது

உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும் மனித உரிமைகளையும் மதிப்பையும் பேணவும் சான்பிரான்ஸிஸ் கோவிலே 1945-ம் வருடம் ஜூன் மாதம் 26ந் திகதி 50 நாடுகளின் பிரதிநிதிகள் கூடி, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தை அமைத்தனர். இருபத்தொரு வயது பூர்த்தியடைந்த இந்த ஸ்தாபனம் விசேஷமாக எதையும் செய்யாவிடினும், அது இவ்வளவு காலம் சாகாமல் இன்றும் உயிருடன் இருப்பதே ஒரு பெரிய சாதனை என்றுநமது ஆங்கில சகவர்த்தமானி கூறுகின்றது. இது பெரியகாரியம்தான். என்றாலும், எந்த மேலான நோக்கங்களுடன் இது ஆரம்பிக்கப்பட்டதோ அவை நிறைவேற வேண்டுமாயின், அந்த ஸ்தாபனத்திலுள்ள குறைகளை உணர்ந்து, அதைப்பலப்படுத்த வேண்டியது அவசியம்.

இப்பொழுது அச் சபை அங்கத்தினர் எண்ணிக்கை 117 ஆக, அதாவது இரட்டிப்புக்கு மேலாக இருப்பினும், அதில் மக்கள் சீனம், ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு இன்னும் இடமளிக்கப்படாதது பெரிய குறையென்றும், இக்குறை நீர்க்கப்பட வேண்டுமென்றும், இலங்கையில் ஐ நா தூது கோஷ்டித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சரியாக வற்புறுத்துகிறார். சுண்டைக்காய்நாடுகளையெல்லாம் அந்த ஸ்தாபனத்தில் சேர்த்துக் கொள்கையில், உலகிலேயே அதிக ஜனத்தொகையுடன் கூடியபுதுசீனத்துக்கு இடமளிக்க மறுப்பது எக்காரணம் பற்றியும் மறந்து வருவது, அந்த ஸ்தாபனத்தைப் பலப்படுத்தி, அதன் நோக்கமும் நிறைவேற முடியாதபடி தடுப்பதாகும்

மேலும் உலகசமாதானத்தைப் பாதுகாக்க, உலக ஸ்தாபனத்தை அமைத்திருக்கையில், தனித்தனியேஇராணுவக் கூட்டுகளை சில வல்லரசுகள் ஏற்படுத்தியுள்ளது. அந்த ஸ்தாபனத்தை மதிப்பதாகாததுடன் அதன் சமாதான லட்சியம் நிறைவேறுமல் முட்டுக்கட்டை போடுவதுமாகும். இது நன்கு தெரிந்தும், தங்கள் சுயநல, ஆதிக்க நோக்கங்களுக்காக இராணுவ கூட்டுகளை ஏற்படுத்திக்கொண்டு காரியங்கள் செய்கின்றன. இதனால் ஏற்படும்விபரீத பலன்களை இங்கு விளக்கத் தேவையில்லை.

இந்த அனுபவங்களால் மனம்மாறி ஐ நா ஸ்தாபனத்தைப் பலப்படுத்த வல்லரசுகள் மட்டுமன்றி இலங்கை போன்ற சிறிய நாடுகளும் எவ்வளவோ செய்யலாம். மனித உரிமை சாசனத்தை ஒப்புக்கொண்டு, அதன்படி காரியங்களைச் செய்வதாயின், மனித மதிப்பையும் அதன்மூலம் உலக சமாதானத்தையும் பாதுகாக்க இலங்கை தனது பங்கைச் செய்ததாகுமா? வாழ்க ஐக்கியநாடுகள் ஸ்தாபனம்!

"மாணவரின் திறமைக்கேற்ப கல்வி அளிக்கப்பட வேண்டும்"

கல்வியின் தேக்கநிலைக்கு கலைப்பகுதி புறக்கணிக்கப்பட்டதும் ஒரு காரணமாகும்"

மாவிட்டபுரம், சனி

"பொதுக்கல்வி, தொழில் நுட்பக்கல்வி பற்றி அரசாங்கம்செய்யவிருக்கும் சீர்திருத்த யோசனைகள் விரைவிலே பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன எனத் தெரியவருகிறது. இதுபற்றித் செய்தித்தாள்களில் வெளிவந்த வற்றைக்கொண்டு நோக்குமிடத்துப் பாடசாலை அமைப்பு முறையில் பெரிய மாற்றம் நிகழப்போகின்றது என எதிர்பார்க்கலாம்" என்று தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் கல்லூரியின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்துப்பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வி மாற்றம் அவசியம் தேவை

"நாட்டின் கல்வி அமைப்பிலே இதுபோன்ற மாற்றம் நேரத்தோடு வந்திருக்க வேண்டும். 1943-ம் ஆண்டிலே கல்வி பற்றி ஆராய்ந்த சிறப்பான குழு அதன் புகழ்பெற்றதன் அறிக்கையிலே இதுபோன்ற பெரும் மாற்றம்வேண்டும் எனக் கூறியது. மாணவரின் இயல்பான திறமைக்கேற்ற கல்வி அளிக்கப்படவேண்டும். இக் குழுவும் இக் கருத்திலேயே தெரிவித்திருந்தது. உயர்தரக்கல்விக்குத் தகுதியுடையவர், தொழிற்றுறைக் கல்விக்குத் தகுதியுடையவர் என மாணவர்களை எப்படித் தரம்பிரிக்கலாம் என்பது பற்றி இதுவரைகாலமும் சிந்தனை நடந்துவந்துள்ளது மாணவரின் திறமையைக் கணித்த பின்னர் தரம் பிரிக்கும் திட்டம் ஒன்று எல்லோராலும்விரும்பத்தக்கமுறையில் உருவாக்கலாம் என நம்பப்படுகின்றது. மாணவரின் எதிர்காலம்பறிய ஆலோசனைகளைப் பெற்றோர் பொதுவாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

பாடசாலை அமைப்பு

பாடசாலை அமைப்புப் போன்ற அலுவல்களில் நாம் இதுவரையும் புலனைச் செலுத்தி வந்திருக்கிறோம். இதனால் கல்வியின் அடிப்படைநோக்கம் மாணவரின் பண்பை வளர்த்து அவர்களை நல்லவராக்குதல் என்பதை நாம் மறந்துவிடவும் கூடும். உலகியல் வாழ்விலே நற்பயனளிக்கக்கூடிய அறிவை மாத்திரம் வழங்குவதல்ல மாணவரின் தனித்துவம் வளர்ச்சியடைந்து அவர்கள் பண்புடன் நிதானமாக வாழப் பழகமாட்டார்கள். நல்லதை நாடும் பண்பைப் பதியவைத்தல், நல்லவற்றை மதித்துநடக்க விரும்பும் உணர்ச்சியை உருவாக்குதல் ஆகியனவே கல்வியின் முக்கிய மான கடமை. விஞ்ஞான அறிவு வேண்டுமென்பதில் பெரும் விருப்பங்கொண்டு கலைப் பகுதியைப் பூரணமாகப் புறக்கணித்ததனாலே கல்வியில் இப்படியான தேக்க நிலை உருவாகியுள்ளது. இலக்கியம், கிரேக்கம், லத்தின், சமஸ்கிருதம்போன்ற தென்மொழிகள், தத்துவ ஞானம் வரலாறு போன்ற வைகளைக் கற்பதினாலே நன்மைகள் ஏற்படுகின்றன. ஆனால் இன்று கல்வியாலும் பிள்ளைகளுக்கு இந்த வாய்ப்புக் கிட்டுவதில்லை.

எங்கள் மூதாதையர் இந்த நல்லியல்புகளை எங்கள் சமய இலக்கியங்களிலும், காவியங்களிலும், நீதிநூல்களிலும் இருந்து பெற்றுத் தம்வாழ்க்கையை வளம்படுத்தினர். இப் பண்பு அவர்களின் வாழ்க்கையில் அடிஆத்திபாரமாக அமைந்தது. கல்வி அறிவில்லாதவர்கள் கூடக் கேள்வி அறிவினால் நற்பயன் பெற்றனர். கோயில்களிற் புராணங்கள், திருமுறைகள் படிக்கப்பட்டன. பயன் சொல்லப்பட்டன. இவைகளைக் கேட்டு அவர்கள் நன்மைபெற்றனர். இதனால் அவர்களிடம் ஒழுக்கம் நிலவியது. இந்த உளப்பாங்கு அற்றுப்போனதினால் எங்கள் பொருளாதார வாழ்க்கையிற்கூட முன்னேறமுடியாத நிலைவந்துவிட்டது. ஐரோப்பாவிலிருந்த ஒருவர் இலங்கைக்கு வந்திருந்தார். அவர் எங்கள் சமுதாயத்தை ஆழ்ந்து கவனித்தபின்னர் கூறியதை இங்கு குறிப்பிடலாம் "இலங்கையில் இயற்கை அளித்த வளம் நிறையஉண்டு. இருந்தும் இலங்கை பொருளாதாரத்தில் ஏனைய நாடுகளிலும் பார்க்கப் பின்தங்கியுள்ளது" அந்த ஐரோப்பியரின்கருத்துப்படி இந்த நாட்டுச் சாதாரணமான பிரஜைகள் நாட்டின் நன்மையுடன் பூரணமாகக் கலந்து கொள்ளாமலிருக்கின்றனர். இதுவே இப் பின்தங்கிய நிலைக்குக் காரணம். நாட்டின் பொதுநன்மையிலும் பார்க்கச் சுயநலமே சமுதாயத்தில் இடம்பெறுகின்றது. இதனால் தனிமனிதனுக்கும் அரசாங்கத்திற்கும் பெரும் பிளவு ஏற்படுகின்றது.

எங்களின் சமுதாயத்தில் எங்கு நோக்கினாலும் உரிமைகளைப்பற்றிய அமுத்தப் பேச்சு எழுகின்றது. அதே நேரத்தில் கொடுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாக இருக்கும் நிலை இல்லை. இந்த அறிகுறிகள் சமுதாயத்தில் எல்லாப் பிரிவிலும் காணப்படுகின்றன.

இ. போ. ச. தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, ஞாயிறு

இ. போ. ச. ஊழியர்கள் எவராகுதல் கடமை செய்யும்பொழுது அரசியல் விஷயங்களில் பேச்சுவார்த்தைகள் பிராயாணிகளுடனோ அல்லது பொதுமக்களுடனோ நடந்தால் அவர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இ. போ. ச. தலைவர் ஊழியர்களுக்கு விடுத்த சுற்று நிருபமொன்றில் எச்சரிக்கை செய்துள்ளார்.

"ஒரே சங்கத்தின்மூலம் உரிமை கோருவோம்"

ஆசிரியர்கள் கூட்டத்தில் அழைப்பு

வவுனியா, ஞாயிறு

ஆசிரியர்களான நாம் பல கோணங்களில் தாக்கப்பட்டு வருகின்றோம். எமது குறைகளையெல்லாம் எடுத்துக் கூறி நிவர்த்தி செய்வதற்கு இப்படியான சங்கங்கள் தான் முன்வரவேண்டும். ஆசிரியர்களான நாம் ஒற்றுமையாக ஒன்றுபட்டு ஒரே சங்கம் அமைக்க முயற்சிக்கவேண்டும். இன்றைய அரசாங்கம் கல்விக்கு முதலிடம் கொடுத்துள்ளதுடன் பாடசாலைகளைத் தரம் பிரிப்பதிலும் ஈடுபட்டுள்ளது. இதனால் நாம் அதிக நன்மையடையலாம். ஆனாலும் கஷ்டமான இடங்களிலுள்ள ஆசிரியர்கள் ஒரு கால எல்லைக்குள் வசதியான இடங்களுக்கு மாற்றப்படவேண்டும். ஆசிரியர்களின் பிரச்னைகளில் அரசியல் தலையீடுகள் முற்றாக நீக்கப்படுவது முக்கியமாகும்" என்று அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழாசிரிய சங்க வவுனியா கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசியவித்துவான் பொ. சிவப்பிரகாசம் குறிப்பிட்டார்.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டனர்.

தலைவர்: திரு. செ. கந்தையா, உபதலைவர்: செல்வி சி. தையல்முத்து, உபதலைவர்: ச. குமரேசையா, காரியதரிசி: திரு. வ. மகாலிங்கம், உபகாரியதரிசிகள்: திருவாளர்கள் ச. கந்தசாமி, ம. கந்தசாமி, தனபதிகாரி: திரு. மு. குமாரசிங்கம், உபதனபதிகாரி: திரு. ச. துரைச்சாமி, கணக்குப் பரிசோதகர்: திரு. மு இரத்தினசிங்கம்

திரு மு நடராசா, திரு மதி சிவபாக்கியம் ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

வியட்னாமுக்கு புது யு. எஸ். தூருப்புகள்

சைகோன், ஜூன் 26

தென்வியட்னாமுக்கு மேலும் 1000 புதிய அமெரிக்கத் தூருப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

அதேசமயம் வியட்காங்கியருக்கு உதவியாகப் போராட வட கொரியா தொண்டர்களை அனுப்பப் போவதாய் அறிவித்தது.

வட வியட்னாம் உயரே நேற்று 2 அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன.

கிழக்குப் பாகிஸ்தானில்...

கல்கத்தா, ஜூன், 26

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்படவிருக்கும் பொது வேலைநிறுத்தத்தை முறியடிக்க அரசாங்கம் பெரு முயற்சி செய்தபோதிலும், மக்கள் ஆதரவு இதற்குப் பெருகிவருவதாகக் கல்கத்தாவுக்குக் கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

மேற்குப் பாகிஸ்தான் ஆதரவாளர்களுக்கும் மாகாண சுயாட்சி கோருபவர்களுக்குமிடையே பல கைகலப்புகள் இடம்பெற்றிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நாடுகள் கருத்தரங்கில் உடுப்பிட்டிஎம்.பி.கலந்துகொள்வார்

நாளை அமெரிக்கா புறப்பாடு

கொடிகாமம், திங்கள்

'நான் அமெரிக்கா செல்வது உல்லாசப்பிரயாணத்திற்கல்ல. உலகநாடுகளின் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காகவே' என்று உடுப்பிட்டி எம். பியும் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளருமான திரு. எம். சிவசிதம்பரம் நேற்று மூன்றிலம் இரவு நமது நிருபரிடம் தெரிவித்தார்.

திரு. சிவசிதம்பரம் கொடிகாமம் புகையிரத நிலையத்திலிருந்து மெயில் வண்டியில் புறப்பட்டபொழுது நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் திரண்டுநின்று வழி அனுப்பினர்கள்.

திரு. சிவசிதம்பரம் ஆதரவாளர் மத்தியில் பேசும்போது தமிழ்மக்களுக்கும் இந்நாட்டிற்கும் பெருமை தேடித் தரும் விதத்தில் நடந்துகொள்ள வேண்டுமென்று கூறினர்.

என்னை அவர்கள் பிரதிநிதியாக தெரிவு செய்த உடுப்பிட்டித் தொகுதி மக்களுக்கு இது ஒரு பெருமைக்குரிய விஷயமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இம்மாதம் 28-ந் திகதி கொழும்பிலிருந்து விமான மூலம் புறப்படும் திரு. சிவசிதம்பரம் நேராக பாரிஸிற்கு செல்லுவார். அங்கு மற்ற நாட்டுப் பிரதிநிதிகளை சந்தித்து அவர்களுடன் அமெரிக்கா செல்வார்.

அமெரிக்காவில் பொது நிர்வாகம் பின்தங்கிய நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி என்னும் விஷயங்கள் பற்றிய கருத்தரங்கில் கலந்துகொள்வார்.

திரு. சிவசிதம்பரம் இலங்கை திரும்பும் வழியில் பிரான்ஸ், லண்டன், ஜப்பான், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்து அங்குள்ள கைத்தொழில் அபிவிருத்திகளை பார்வையிடுவார். உடுப்பிட்டித் தொகுதி வேலைகளை கவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் கவனித்துக் கொள்வா ரென்றும், தான் இலங்கை திரும்ப மூன்று மாத காலம் செல்லுமென்றும் திரு. சிவசிதம்பரம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.



ஆசிரியருக்கு கடிதங்கள்

சிங்களக் கல்வி

இலங்கை தற்பொழுது பல மாற்றங்களையும் நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது. இச் சூழ்நிலையில் சிங்களத்தை கட்டாய பாடமாக்காமல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் போதிப்பதற்கு பெற்றோர்களின் விருப்பத்திற்கும் ஏற்றக்கூடியமுறையில் கற்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அது விரும்பத்தக்கதொன்றாகும். இச் செய்கை தேசிய இனங்களுக்கிடையே ஒற்றுமையாகவும், தேசிய ஒருமைப்பாட்டையும் வளர்க்க ஏதுவாயிருக்கும். தேசியப் பற்றையும், சமத்துவத்தையும் விரைவுபடுத்தவும் இச் செய்கை வழிவகுப்பதாகும்.

புத்தபெருமானினதும், அசோக சக்கரவர்த்தியினதும் கருத்துப்படி ஒருவரது சமயம் மற்றவர்கள்மேல் திணிக்கப்படக் கூடாதென்பதேயாகும். இதிலிருந்து பாஷை விஷயத்திலும் கட்டாய திணிப்பு ஏற்றுக் கொள்ளகூடிய தொன்றல்ல என்பது புலனாகிறது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் சிங்களம் கற்றால் அவர்கள் இலங்கைக்கும் தங்களுக்கும் சேவைசெய்தவர்களாவா கள். சிங்களச் சகோதரர்கள் தமிழ் படிப்பதனால் நன்மை ஏற்படுமோ என்பதை நான் ஒரு தமிழராக இருக்கிற படியால் கூறுது சிங்களச் சகோதரர்களின் சிந்தனைக்கே விட்டுவிடுகின்றேன்.

இன்றைய சூழ்நிலையில் திரும்ப திரும்ப ஒரு விஷயத்தை கூறுவதால் வகுப்புவாத சர்ச்சைகளும், எதிர்வாதங்களும் தேவையற்ற முறையில் ஏற்பட இடமுண்டாகிறது. ஆகையால்இவை களைத் தவிர்த்து நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திசிங்கள-தமிழ்மக்களின் ஒற்றுமையை வலுப்பெறச் செய்து அவர்கள் தொடர்ந்தும் நண்பர்களாகவும் சம பங்காளர்களாகவும் வாழ வழிசெய்யவேண்டும்.

எஸ். சிவசுப்பிரமணியம்

கொழும்பு - 12.

ஃ ஃ ஃ

முன் அனுபவம்

மழைக்காலத்தே புதரில் இருந்து புறப்படும் ஈசல்கள் போன்று கல்லூரிச் சாலைகளை விட்டு மாணவர்கள் வருடந்தோறும் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் எல்லோருக்கும் வேலை கிடைத்துவிடுவதில்லை. பணமுள்ளவரும் விசேஷ சலுகையுள்ளவரும் வேலை தேடிக்கொள்கின்றனர். ஆனால் மற்றவர்கள் அரசாங்க வர்த்தமானியில் ஏதாவது காலி ஸ்தானங்கள் உண்டா என்று எதிர் நோக்குகின்றனர். வர்த்தமானியில்வெளியாகும் காலி ஸ்தானங்களுக்குரிய தகைமைகள் கண்டு ஏங்குகின்றனர். காரணம் எவ்வேலை எடுத்தாலும் முன்அனுபவம் தேவை என்று காணப்படுவதே. அனுபவம் குறைந்தவர் மனமுடைந்து பத்திரிகையில் வெளியாகும் விளம்பரங்களை நோக்குகின்றார். அங்கே முற்பணம் தேவையென்று காணப்படுகின்றது. இச் சூழ்நிலையில் பணவசதிருள்ளவர் வேலை தேடிக்கொள்கின்றார். அப்படியானால் ஏழையின் நிலை? இப்படியான சூழ்நிலையினால் பாதிக்கப்படும் ஒரு மாணவனது உள்ளம் விரக்தியடைகின்றது. அதனால் அவன் தன் வாழ்வையே மாற்றிக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பாட்டாலும் வியப்பில்லை. எமது அரசாங்கம் இவ் விஷயத்தில் கூடிய கவனம்செலுத்தி மாணவர் கொண்டாலில்

ஆங்கில அறிவுள்ள..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவனிக்க வேண்டியவர்களாதலால் ஆங்கிலத்தில் திறமையுடையவர்களாயிருந்தால்தான் விசாரணையை விளங்கிநீதி செலுத்தக்கூடியவர்களாய் இருப்பார்கள்

ஆகவே அடுத்தபருவகால விசாரணைக்கு ஆங்கிலத்தில் சிறந்த அறிவுள்ள ஜூரர்களைக்கொண்ட பட்டியலைத் தயாரித்து அனுப்பு மாறு அரசாங்க அதிபருக்கு உத்தரவிடுகிறேன்

அஸைஸ் விசாரணை ஆரம்பமானபோது முல்லைத்தீவு கொலைவழக்குக்கு ஜூரிமார் கள் தெரிவுசெய்யப்பட்டனர். அப்பொழுது ஜூரியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவரை முடிக்குரிய வழக்கறிஞர் ஆட்சேபித்தார். ஆனாலும் அவர் அதைக்கவனியாது ஜூரிசபையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார் அச்சமயம்அஸைஸ் கிளார்க், 'அவர் ஆட்சேபிக்கப்பட்டுள்ளதாக' தெரிவித்தார் அவர் அதையும் பொருட்படுத்தாது ஜூரி சபையை நோக்கிச்சென்றார்

இதனைக் கவனித்த நீதியரசர் அவரை வெளியில்நிற்கு மாறு உத்தரவிட்டு இங்கு நீதிமன்றத்தில் நடைபெறுபவற்றை விளங்கக்கூடிய ஆற்றல் விளாதவர்களை ஜூரிப் பட்டியலில் சேர்த்திருப்பது மிகவும் கவலைக்குரிய விஷயமென்று கூறினார்.

இப்படியானவர்கள் ஜூரி சபையில் இருந்தால் எவ்விதம்நீதி செலுத்தமுடியும் என்றும் நீதியரர் தெரிவித்தார்.

பிரதமரின் கிழக்கு:

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாண விஜயத்தைத் தொடர்ந்து வடக்கு மாகாணத்துக்குப் பிரதமர் மேற்கொள்ளவிருக்கும் விஜயம் அதிக தூரத்திலில்லை என்றும் சர் ஜோன் கொத்தலாவலைக்குப் பின், எந்த இலங்கைப் பிரதமரையும் வரவேற்காத யாழ்ப்பாணம் விரைவில் திரு. டட்லி சென நாயகாவை வரவேற்கும் என்பது நிச்சயமாகிவிட்ட தென்றும் கூறப்படுகிறது.

ஐ.நா.வில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முழு உலகமும் அரசியல் சுதந்திரம் பெறும் போலது ஐ நா வின் அங்கத்துவ எண்ணிக்கை மேலும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கும்

ஐ நா கடந்த 21 ஆண்டுகளில் உலக சமாதானத்துக்கு போற்றுதற்குரிய சேவை செய்திருக்கிறது எனினும் வல்லரசுக் கெடுபிடிகள், ஆயுதப் பாகரணம் போன்ற முக்கிய விஷயங்கள் இன்னும் குறைக்கப்படாமலிருக்கின்றன பல நாடுகளில் ஐ நா அமைதிப் படைக்குச் செலவாகும் தொகை சில அங்கத்துவ நாடுகளால் இன்னும் செலுத்தப்பட வில்லை. ரஷ்ய, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், மேற்கு ஐரோப்பாவில் பிரான்ஸ் ஆகியன இவற்றில் சில நாடுகளாகும்

ஐ நாவின் கொள்கை, லட்சியம் ஆகியவற்றை தீவிரமாக ஆதரிக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும் அடுத்த பொதுச்சபைக் கூட்டத்தில் பொதுச்சபையின் தலைமைப் பதவிக்கு இலங்கை போட்டியிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது

களைத் தெரிவுசெய்து அவர்களுக்கு பயிற்சியளித்து அனுபவசாலிகளாக்க முன்வரவேண்டும். பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்களிடம் உடனடியாக முன்அனுபவம் எதிர்பார்ப்பதில் அர்த்தமிருக்காது.

க. கனகலிங்கம்

மஸ்கேலியா நீர்வீழ்ச்சி மின்சார நிலையம்

வெளிநாட்டிலிருந்து நிபுணர்கள் வருகை

கொழும்பு, ஞாயிறு

கொழும்பிலிருந்து கிழக்கே அறுபது மைல்தூரத்திலுள்ள மஸ்கேலியாவில் நீர்வீழ்ச்சியில் இயங்கும் மின்சார நிலையமொன்றினை நிறுவுவதற்கு யூகோஸ்லேவியா — இலங்கை ஆகிய இருநாடுகளுக்குமிடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்துக்கிணங்க செகரப்பில் உள்ள வெளிநாட்டு ஒப்பந்தங்களை அமுல்நடத்தும் ''இங்கிலிற்'' என்னும் தொழில் அமைப்பு ஸதாபனம் 'ஸ்பிவிற்' எனும் நிர்மாண அமைப்பு ஸதாபனம் ஆகியவை மூலம் இத்திட்டங்களுக்கு சக்தி வாய்ந்த இயந்திரங்களையும் பிரத்தியேகமான கருவிகளையும் இங்கு அனுப்பி வைத்துள்ளது.

இலங்கையில் ''ஹைட்ரோ'', 'மொன்ராஜா', 'மறிபோர்' ஆகிய ஸ்தாபனங்கள் இந்த நிர்மாண வேலைகளைக் கூட்டாக நடத்தும்.

மஸ்கேலியாவில் பெரும் பகுதி நிர்மாணவேலைகள் கடந்த மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. நீர்வீழ்ச்சியால் இயங்கும் மின்சார நிலையத்தை அமைப்பதற்கு திட்டமிடுதல் உட்பட இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளுக்கும் பொருள்களை நிலையத்துக்கு கொண்டுவருவது போன்ற செலவினங்களுக்கும் மொத்தம் 200 லட்சம் டாலர்கள் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

'ஸ்பிலிட்' நிர்மாண அமைப்பு பெரிய சிமிட்டித்தடுப்பு அணை, நிலத்துக்குள் இயந்திர அறை அமைப்பது எட்டு கிலோ மீட்டர் நீளச் சுரங்கப்பாதை ஆகியவற்றை நிறுவும் பொறுப்பினை உடையது. இதுதவிரமற்றொரு சிறிய சிமிட்டி தடுப்பு அணையை நிர்மாணிக்கும் செலவு 12,00,000 டாலர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அணையின் நிர்மாணப்பொறுப்பினை இலங்கையிலுள்ள ஓர் பொறியியல் வர்த்தக ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது ''ஸ்பிலிட்'' நிர்மாண அமைப்பின் பத்து நிர்மாண பொறியியல் வல்லுனர்கள் நிர்மாண வேலைகள் நடைபெறும் இதலத்தில் நிர்மாண ரீதியில் திட்டங்களை மேற்பார்வையிடுதல், நிர்மாண வேலைகளை ஆரம்பித்து வைத்தல் போன்ற திட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

இலங்கைத் தேயிலையின் கிராக்கி குறையாது

பிரிட்டிஷ் தூதர் நம்பிக்கை

கொழும்பு, ஞாயிறு

''இன்று நமது உலகத்தை எதிர்நோக்கியுள்ள அதிமுக்கிய பிரச்சினைகளில் ஒன்றுதான் இனப்பிரச்சினை. இந்தப் பிரச்சினையை ஒரு சாதகமாகக்கொண்டு துவேஷத்தையும் கலவரத்தையும்தூண்டிவிடும் சக்திகளும் உண்டு. பல-இன கூட்டமைப்பான காமன்வெல்த் எதிர்காலத்தில் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் முக்கிய பங்கு வகிக்குமென நான் கருதுகிறேன்''

இவ்வாறு இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் சேர் ஸ்டான்லி தொம்லின்சன் கொழும்பு ரோட்டரி சங்க கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரிட்டனின் எதிர்காலம் என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்திய அவர்பிரிட்டனின் சர்வதேசக் கொள்கைகளைப் பொறுத்தவரை தற்போது கடைப்பிடிக்கப்பட்டுவரும் கொள்கைகள் இன்னும் பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் கூட தொடர்ந்து இருந்துவரும் என்றார்.

''தேசிய பாதுகாப்புக்கு எமது சக்திக்கு அப்பால் நாம் செலவழித்துவருவதாகவும் பரந்த அளவில் வெளிநாட்டு கடைப்பாடுகளில் நாம் பொறுப்பேற்றுள்ளதாகவும்பலர் குற்றம்சாட்டிவருகிறார்கள். ராணுவ பந்தோபஸ்து கூட்டணிகள் மூலம் எமது நேசநாடுகளின் கூட்டுறவுடனேயே எமது பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதில் சந்தேகமேயில்லை. தற்போதுமட்டுமின்றி இன்னும் பத்து வருடங்களுக்கு பின்னரும் இந்தக் கொள்கைதான் கடைப்பிடிக்கப்பட்டுவரும், என்றார்.

''இன்னும் பத்து ஆண்டுகளில் இங்கிலாந்தில் ரசனை எவ்விதம் மாறுபடினும் இலங்கைப் பொருளாதார வளர்ச்சி இலங்கைத்தேயிலை ஏற்றுமதியின் முக்கியத்துவத்தை எவ்வளவு குறைத்தபோதிலும் இந்நாட்டு தேயிலை ஏற்றுமதியில் பெரும்பாலான பங்கு எமது நாட்டுக்கே செல்லும் என்பதில் எமக்கு ஐயமில்லை'' என சேர் தொம்லின்சன் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

கொலை வழக்கு:..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதைத்து விட்டதாகவும், இதைப்பற்றி யாருக்கும் கூறவேண்டாமென்றும் எதிரி என்னிடம் கூறினார். எனக்குப்பயமாக இருந்தது. நான் வீட்டிற்குச் சென்று படுத்துவிட்டேன். எதிரியை நிலவு வெளிச்சத்தில் அடையாளம் கண்டுகொண்டேன். இறந்த வரை நான்குநாட்களுக்குமுன் பார்த்தேன். அதற்குப்பின் அவரைக் காணவில்லை. பிரேதத்தையும் காணவில்லை. மறுநாட் காலை செல்வராசா வந்து கமத்திற்கு வேலைசெய்ய வரும்படி கேட்டார். நான் மறுத்தபோதும், அவர் கட்டாயப்படுத்திக் கூட்டிக் சென்றார். கமம் இரண்டு கட்டைக்கு அப்பால் உள்ளது நான் கமத்திற்குச் சென்றேன். எதிரி பின்புறத்தில் வந்தார். தர்மராசா, வேதாரணியம், கனகசபை ஆகியோரும் வந்தார்கள் அன்று மாலைவிடுதிரும்பினேன்.

அசைஸ் விசாரணை இன்று காலை நடைபெறும்

திருடர்களை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் தோல்வியுறவே, சமையலறையிலிருந்த இக்கிளி 'என்ன நடக்கிறது? என்ன நடக்கிறது? விரைவில் வாருங்கள்' என ஆங் கூரலில் சப்தமிட்டது. இதன்பின்னர் திருடர்கள் பிடிபட்டு சிறைக்கனுப்பப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் வயல்

சர்வதேச தொழிலாளர் நலஸ்தாபனம்

ஆட்சிபீடமும் அதன் கடமைகளும்

(ஜாக்ஸ்விக்டர் மொரின் - தொழிலாளர் கல்வி நிபுணர் - கனடா)
தமிழில் 'பேனை'

மூன்று ஆண்டுகளுக்கு மொருதடவை பொதுமாநாட்டின் ஆட்சி பீடம் தெரிவு செய்யப்படுகின்றது. இந்தப் பீடம் ஜெனிவாவில் உள்ள அதன் தலைமை நிலையத்தில் ஆண்டுக்கு மூன்று நான்கு தடவை மட்டுமே கூடி திட்டங்களையும், கொள்கைகளையும் உருவாக்குகின்றது. இந்த ஆட்சி பீடத்தில் 48 உறுப்பினர்கள் இருப்பர். இவர்களில் 24 பேர் அரசாங்கப் பிரதிநிதிகள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள். 12 பேர் தொழிலாளர் பிரதிநிதிகள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள். மற்ற 12 பேரும் முதலாளிகளின் பிரதிநிதிகள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுவார்.

சர்வதேச தொழில்தராதரம்

சர்வதேச அடிப்படையில் தொழில் தராதரத்தை நிலைநிறுத்தும் சர்வதேச தொழிலாளர் நலஸ்தாபன முயற்சி நல்லமுறையில் வெற்றியளித்துவருகின்றது. சர்வதேச அடிப்படையில் தொழில் தராதரத்தை உருவாக்கலும், அங்கத்துவநாடுகளில் பின்பற்றக்கூடியதற்காகவும் பொதுமகாநாடு சர்வதேச தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நிறைவேற்றுகின்றது. அத்துடன் அங்கத்துவ நாடுகள் சர்வதேசத் தீர்மானங்களை ஏற்றுக் கடைப்பிடிப்பதற்கான ஒரு நிர்ப்பந்தத்தையும் அது ஏற்படுத்துகின்றது.

சர்வதேச தீர்மானங்கள்

பொதுமகாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களையும் சிபார்சுகளையும் அங்கத்துவநாடுகள் நடைமுறையில் கடைப்பிடிக்கவேண்டும் என்று கட்டாயம் இல்லை. ஆனால் உள்நாட்டு சட்ட நிர்ணயசபைகளின் கவனத்துக்கு இவைகளைச் சமர்ப்பிக்க அவைகள் கடமைப்பட்டுள்ளன. தீர்மானங்களும் சிபாரிசுகளும் ஒரே தன்மையானவை அல்ல. ஆனால் தீர்மானங்களைப்போல் சிபாரிசுகள் அமுலாக்கப்பட வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை. 1919-ம் ஆண்டு தொடக்கம் இந்தப் பொதுசபை சுமார் 122 க்கு மதிகமான தீர்மானங்களையும் சுமார் 122 க்கு மதிகமான சிபார்சுகளையும் நிறைவேற்றியுள்ளது.

சர்வதேச தொழிலாளர் நலஸ்தாபனம் நிறைவேற்றும் தீர்மானங்களில் பல்வேறுவகையான எண்ணிறைந்த விஷயங்கள் இடம் பெறுகின்றன.

வேலைநேரங்கள்முதல் கதிரியக்கப் பாதுகாப்பு வரையான விஷயங்கள்பற்றியும், சமூகப் பாதுகாப்புமுதல் மீனவரின் தளபாட பாதுகாப்பு வரையான விஷயங்கள் பற்றியும், தொழில் பாதுகாப்பு முதல் சம்பளத்தை தடுனை விடுமுறைகள் வரையிலான விஷயங்கள் மற்றியும் மகாநாடு தீர்மானங்களை நிறைவேற்றுகின்றது. பெண்தொழிலாளர்களின் பிரச்சினைகள்பற்றியும் தீர்மானங்கள் இயற்றப்படுகின்றன, சுதந்திரமான தொழிற்சங்கங்களை அமைத்தல், கூட்டுஒப்பந்தம் செய்துகொள்ளல் பல்வந்த வேலை வாங்குதலை ஒழித்தல், தொழிலாளர் விஷயத்தில் பாரபட்சம் காட்டப்படுவதை நீக்குதல் போன்ற அம்சங்களும் இந்தத் தீர்மானங்களில் இடம் பெறுகின்றன. உண்மையில் ஐ.நா.வின் மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்தில் கண்டுள்ள முக்கியமான அம்சங்களை பல்வேறு நாடுகளிலும் அமுலுக்குக் கொண்டுவரச்செய்யும் சர்வதேச ஸ்தாபனமாக சர்வதேச தொழிலாளர் நலஸ்தாபனம் விளங்குகின்றது.

உடன்படிக்கை

சர்வதேச தொழிலாளர் நலஸ்தாபனம் நிறைவேற்றும் ஒரு தீர்மானத்தை அங்கத்துவநாடு ஒன்று நடைமுறைக்கு கொண்டுவருமாலுல் அத்தீர்மானம் ஏற்கனவே நடைமுறை சாத்தியமாகியுள்ள ஏனைய நாடுகளுடன் கூட்டு உடன்படிக்கை யொன்றை செய்துகொள்வதுபோலாகும். இந்தத் தீர்மானத்தை அங்கத்துவ நாடுகள் கௌரவிக்காவிடில் அவைகள்மீது பலாத்கார நடவடிக்கை ஏதும் எடுப்பதற்கு முடியாது. ஆனால் அங்கத்துவநாடுகள் தமது கடமைகளைச் சரிவரச் செய்கின்றனவா என்பதை விழிப்போடு அவதானிக்கின்றது. மனித நலவுரிமைகளைப் புறக்கணிக்கின்றது என்பதாகக் குற்றஞ்சாட்டப்படுவதை எந்த ஒரு நாடும் விரும்புவதில்லை; எனவே சமூக, தார்மீக நிர்ப்பந்தங்களைமட்டும் ஏற்படுத்துவதற்கு சர்வதேசத் தொழிலாளர் நலஸ்தாபனத்தால் முடிகின்றது.

(இன்னும் வரும்)

மனிதவாழ்வில்

எண்கள் புரியும் 'சர்க்கஸ்'

முன்னோர் அறிந்த உண்மை

குறிப்பிட்ட ஒருவரின் பெயர் பலராலும் அழைக்கப்படும்போது (உச்சரிக்கப்படும்போது) அதன் தன்மைகள் சம்பந்தப்பட்டவரை ஏதோவொரு நுட்பமான முறையில் பாதிக்கின்றது என்பதை முன்கண்டோம்.

ஒருவர் பெயரை இன்னொருவர் உச்சரிக்கும்போது அந்தப் பெயருக்குரியவரின் உருவத்தையும் அவர் தமது மனதில் எண்ணுகிறார் என்பதை இங்கு கவனித்தல் அவசியம். நேரில் கண்டறியப்படாதவராயின் அவரைப்பற்றிய ஒரு உருவம் கற்பனையாகமனத்தில் உருவாகிவிடுகின்றது என்பதையும் உய்த்துணர்கஇப்படிப்பெயர் உச்சரிக்கப்பட்டு அப்பெயருக்குரியவரின் உருவம் மனதில் பிரதிபலிப்பதின் காரணமாகவே அந்தப் பெயரின் தன்மைகள் சம்பந்தப்பட்டவரைப் பாதிக்கின்றது. ஒரு இடத்தில் ஒருவர் பேசும் பேச்சை வேறொரு இடத்தில் வானலைக் கருவியின் மூலம் கிரகித்துவிட முடிவதுபோல், ஒருவர் எண்ணும் எண்ணத்தை இன்னொருவரின் உடலில் பிரதிபலிக்கச் செய்துவிட முடியும் என்பதை அறிக

இத்தத்துவத்தின் அடிப்படையிலேயே பெயரின் தன்மைகள் ஒருவரைப் பாதிக்கின்றன என்று எண்கலைஞர்கள் குறக்கின்றனர்.

பெயரும் உருவமும்

மேலே நாம் குறித்த உண்மைகளை நம் முன்னோர்களாகிய ரிஷிகள், சித்தர்கள் போன்ற பெரியோர்களும், புராணகால மனிதர்களும் அறிந்திருந்தனர். அதன் காரணமாகவே அவர்களின் அரும்பெரும் சக்திபடைத்தவர்களாகவும் விளங்கினர். தபோவலிமையினால் வியக்கத்தக்க சக்திகள் பெற்றிருந்த தபஸிகள் பற்றி நாம் படிக்கின்றோம். இந்தத் தபஸிகள் எண்களையை வெகுவாகப் பயன்படுத்தியுள்ளனர். குறிப்பிட்ட ஒருதெய்வத்தின் அருள்வேண்டின், அந்தத் தெய்வத்தின் உருவத்தைத் தம் உள்ளத்திலிருத்தி ஒரே நிலையிலிருந்து குறிப்பிட்டகாலஅளவுக்குள் குறிப்பிட்டதடவைகள் அத்தெய்வத்தின் பெயரை அல்லது அத்தெய்வத்துக்குரிய மந்திரத்தை உச்சரித்ததின் மூலம் அந்தத் தெய்வத்தை கட்டுப்படுத்தி அதன் அருளை புராணகால மாந்தர்கள் பெற்றிருப்பதாக அறியும் போது நம் முன்னோரின் விஞ்ஞானத்தக்க சூட்சம அறிவைக்குறித்து வியப்புறாமல் இருக்க முடியவில்லை. இந்த சக்தியைப் பயன்படுத்தியே அவர்கள் அந்நேரத்தில் பறக்கவும், நீருக்கடியில் வாழவும் முடிந்தது. இலங்கேஸ்வரனை இராவணன் இந்தச் சூட்சுமத்தை அறிந்திருந்ததால் கடும் தவம் இயற்றி சிவபெருமானின் அருளைப் பெற்றான் என்பதையும் அப்படிப் பெற்ற சக்தியை துஷ்பிரயோகம் செய்ததினால் அழிந்தான் என்பதையும் அறிக. அருச்சுனன், விக்கிரமாதித்தன் போன்ற அரசர்களும் இந்தச் சக்தியை அறிந்து பயன்படுத்தியுள்ளனர்.

மந்திரவாதிகள்

மந்திரத்தால் மாங்காயை விழச்செய்யாமல் போனாலும் இந்த எண்களின் தந்திரத்தால் அதைச்செய்து விடலாமென்பதை மந்திரவாதிகள் அறிவர். ஏக்.தோ.தீன், ஒன்று, இரண்டு மூன்று, வண், ரூ, திறீ என்றெல்லாம் மந்திரவாதிகள் எண்களைப்பயன் படுத்துவதைப் பார்த்திருக்கிறீர்களா? பழங்கால மந்திரவாதிகள் இந்த எண்களின் தார்ப்பரியங்களை தீட்சண்யமாக அறிந்துவைத்திருந்தனர். ஆனால் அவைகளை வெற்றிகரமாக அவர்களால் பயன்படுத்தியிருக்கமுடியும்.

குஞ்சி அப்பு பேசுகிறார்

ஆபாசம் எங்கே கிடக்கு?

இப்ப கொஞ்சக்காலமாதெற்கில் இருந்து ஒரு சத்தம் வருகிறது, அது என்ன என்றுஉங்களுக்குத் தெரியுமே?

என்ன வலு கடுமையாய் தலையைச் சொறியிறியள். விளங்கயில்லைப் போலவேற ஒன்றுமில்லை. இந்தத் தென்னிந்தியப் படங்களைத் தடை செய்யவேனும் என்று சிலர் சத்தம் போடுகினம் எல்லே அதைப் பற்றித்தா சொல்லுறேன்.

நினைச்சாச் சிரிப்புத்தான் வருகிறது. தமிழ்ப்படங்கள் ஆபாசக்குப்பையாம். இவர்களுக்கு ஆங்கிலத்தில் வார ஆபாசக்குப்பைகள் எல்லாம் இவர் பட்ட கண்ணில என்னும் இல்லைப்போல கிடக்கு. அந்தக் குப்பைகளை விடலே எங்கடதமிழ்ப்படம் ஆபாசமாத்தெரியுது.

"வயது வந்தவர்களுக்கு மட்டும் என்று ஒரு இங்கிலீஸ் படம் வரட்டும் வயது வராத அத்தனையும் முதல்ல அந்தப் படத்தைதான் பார்க்கினம். தியேட்டர்காரருக்கு என்ன காசு கிடைச்சால் கதி. அதால என்ன நட்டம் என்று தெரியுமே. பெடியண்ட தூய உள்ளம் கெட்டு பணமில்லாதவர்களாக நெறி தவறியவர்களாக மாறிப்போகுதுகள்"

கடைசியாஒன்று சொல்லுறனதமிழ்ப்படங்களைப்பற்றி யோசிக்க முதல் பச்சை பச்சையாக வார கிழத்தரமான இங்கிலீசுப் படங்களைத் தடை செய்யவேனும் கண்டியளோ அப்பதான் கண்டியளோ நாட்டு மக்களட உள்ளம் தூயதாக இருக்கும்... நேரமாய் போச்சு அப்பவாறன்.

—குஞ்சி அப்பு

— 4 —

ஆனால் இன்று தெருவோரங்களில் 'ஜால'வித்தை காட்டுபவர்கள்கூட தம்மை மந்திரவதிகள் என்றுகூறிக் கொண்டு ஏதோ பழக்கப் பட்டுப்போன முறைகளைக் கையாள்கிறார்கள்.

பேய்கள், மோகினிப்பிசாகைகள் போன்றவற்றைக்கட்டுப்படுத்துவதாகக் கூறுகிறவர்கள் கூட அதற்குரிய மந்திரங்களை 108 தரம் அல்லது ஆயிரத்தெட்டுத்தரம் ஓதுவதாகக் கேள்விப்படுகிறோம் அல்லவா? இவையெல்லாம் முறைப்படி இக்காலத்தில் கையாளப்படுகின்றனவா என்று தெரியவில்லை. ஆனால் முற்காலத்தில் இந்திய ஞானிகள் இக்கலையின் நுட்பத்தை வெகுவாக அறிந்து பயன்படுத்தியுள்ளார்கள் என்றே தோன்றுகின்றது. இதுபற்றி விரிவாக ஆராய்வது எண்களை அறிஞர்களின் கடமை.

(மேலும் வரும்)

சிந்தனைத்துளி

ஒருவன் உயர்ந்தவன் அல்லது தாழ்ந்தவன் என்பதை எதனைம் அறிவது? பேசும் பேச்சால், சிரிக்கும் சிரிப்பால், உடுத்தும் உடுப்பால் நடக்கும் நடையால், எழுதும் எழுத்தால் எல்லாம் ஒரு மனிதனின் உண்மையான உள்ளத்தைக் கண்டறியவியலாது

சந்தர்ப்பத்துக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றாற்போல் பேசி சமாளிப்பதைக் கண்டு ஒருவனைப் பெரிய மனிதனாகக் கருதுவதியலாது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர் இன்றைய உலகில் சர்வசாதாரணம் சிரிப்பது இயற்கை பைத்தியக்காரன் கூடத்தான் எப்போதும் சிரிக்கிறான் திருடர் கூடத்தான் ராஜநடை நடக்கிறான்

இழி செயல் புரிபவன் எவ்வளவுதான் தேனைப் பேசி, சிறப்பாக உடுத்து நடந்து எழுதினாலும் காலத்தால் காட்டிக் கொடுக்கப்பட்டு விடுவான்

ஒரு மனிதன் உள்ளத்தால் உயர்வன் என்பதை அறுதியிட்டு அறிவது கடினம். ஏனெனில் மனிதன் குறைகளையுடையவன். மனிதக் கண்களுக்கு குறைகளைத் தவிர நிறைகள் தெரிவது குறைவு. ஆனால் அவனவன் எடுத்துச்செல்லும் தடங்களைக்கொண்டு அவனுடைய உளப்பாங்கினை அறியமுடியும்.

எனவே, முன்னால் நடந்து செல்லும் நாம், நமக்குப் பின்னால் வருபவர்கள் நம்மை அடையாளங்கண்டு கொள்ளும் விதத்தில் நீதிமான்களாகவும் நேர்மையாளர்களாகவும் நடப்போமாக.

—கீழவன்.

கோணமலை ஓரத்திலே.....!

"கோணமலை ஓரத்திலே
கொழுந்தெடுக்கப் போற தங்கம்,
கூடை இறக்கிவச்சி
—தங்க தலையாலே ஒரு
குளிர்ந்தவார்த்தைபேசிப் போயேன்,
—பொன்னும் குயிலாளே!..."

மலை அருவியின் அருகே கற்பாறை யொன்றின் மீது அமர்ந்து எங்கோ தொலை தூரத்தை நோட்டமிட்ட வண்ணம் சிந்தனையில் ஆழ்ந்து போயிருந்த என்காதுகளில் மேலேயுள்ளபாடஇசையோடு இழைந்து தவழ்ந்து வந்து புகுந்தது.

காலைநேரம் இளம்வெயில் தகதகவென முருங்கைமரக் கொப்புகளுக்கூடாக கீற்றுக் கீற்றாக விழுந்து பரவசப் படுத்திக் கொண்டிருந்தது. மலைமுகட்டிலிருந்துபொங்கி வழியும் நீர்த்தாரைகள் ஓரே உள்ள பாறையின் மீது விழுந்து சிதறி வெண்மையமாக மேலேயெழுந்து மறையும் காட்சி அற்புதமாக இருந்தது. முருங்கை மரக் கொப்புகளில் காய்களைக் கொய்து விளையாடும் பிள்ளைகளின் கீச்சுக்குரல் இனிமையாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

நான் கழுத்தைத்திருப்பி இசை வந்த திசையை நோக்கினேன். தலையில் உரச்சாக்கும், தோளில் பூமியைக் கிண்டுவதற்கான மூள்ளும் சுமந்தபடி செங்குத்தான மலையில் ஒரு வாலிபன் ஏறிக்கொண்டிருந்தான். அவனைத்தொடர்ந்து இன்னும் பலர் சென்று கொண்டிருந்தார்கள்.

பார்வை இன்னொருபக்கம் திருப்பினேன். கூடைகளைச் சுமந்த வண்ணம் சாரி சாரியாக பெண்தொழிலாளரின் கூட்டம் போய்க்கொண்டிருந்தது.

எத்தனையோ துன்பங்கள் எத்தனையோ பிரச்சினைகள், எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு இந்தநாட்டைச் செழிக்கவைக்கும் அந்தத் தொழிலாளர் நிலையை எண்ணினான் ஒருகணம் வியந்தேன்... அந்தவாலிபன் என்னை ஏளனம் செய்வது போல் தன்பாட்டில் பாடிக் கொண்டுபோனான்... அந்தப் பாடல் வெகுநேரம் வரை என்காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

—பேனை

கடை உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பஸார் வீதியிலுள்ள ஒரு கடை உடைக்கப்பட்டு சுமார் 4000 ரூபாய் பெறுமதியான பொருட்கள் நேற்று முன்தினம் கொள்ளையடிக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. ரெடிமேட் ஷேர்ட்டுகள், துவாய்கள், கடிகாரம் ரேடியோ ஆகிய பொருட்கள் திருட்டுப் போயிருப்பதாக அறியப் படுகிறது.

இதுசம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸார் புலன் விசாரணைசெய்துவருகின்றனர். இதுவரை எவரும் கைதாகவில்லை. (ந.நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி விளையாட்டுப் போட்டி

இரு சாதனைகள் நிலைநாட்டப்பட்டன

யாழ்ப்பாணம், திங்கள் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்த (இல்லங்களுக்கிடையேயான) விளையாட்டுப் போட்டி கல்லூரி மைதானத்தில் செல்வி சி. ஹன்ற் தலைமையில் நடைபெற்றது. ஹாற்றர், குட்சை, பேய்த், ஒவ்பின் என்னும் இல்லங்களுக்கிடையே நடந்த விளையாட்டுப்போட்டியில் ஹாற்றர் இல்லம் 224 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றது குட்சைல்ட் 117 புள்ளிகளும், பேய்த் 105 புள்ளிகளும் ஒவ்பின் 102 புள்ளிகளும் முறையே பெற்றன. மிகவும் காரசாரமாக நடந்தேறிய இப்போட்டிகளில் சிவகுரு பிரபா உயரம்பாய்தலிலும் ராஜலிங்கம் மீனா 200 யார் ஓட்டத்திலும் புதிய சாதனைகளை நிலைநாட்டினர்.

கனிஷ்ட பகுதியில் சரோஜினி நடராஜாவும் மத்திய பகுதியில் மங்களதேவி அரசரத்தினமும் சிரேஷ்டபகுதியில் மீனா ராஜலிங்கமும் வெற்றி வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போட்டிகளின் சில முடிவுகள் வருமாறு:

4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் கனிட்ட பகுதி ஹாற்றர், பேச், குட்சைல்ட்.

4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் (மத்திய பகுதி) ஹாற்றர், பேச், குட்சைல்ட்.

4 x 100 அஞ்சல் ஓட்டம் (சிரேஷ்ட பகுதி) ஹாற்றர், குட்சைல்ட், ஒவ்பின்.

100 மீற்றர் ஓட்டம் (கனிஷ்ட பகுதி) சரோஜினி நடராசா, பத்மராணி மகாதேவா, தயாளினி பரமானந்தன். 100 மீற்றர் ஓட்டம் (மத்திய பகுதி) தேவரஞ்சிதம் சிவக்கொழுந்து, மங்களாதேவி அரசரத்தினம், பவதாரிணி தியாகராசா. 100 மீற்றர் ஓட்டம் (சிரேஷ்ட பகுதி) மீனா ராஜலிங்கம், கஜிரா அலிமரைக்கார் சிவராணி ராஜேந்திரா. 150 மீற்றர் ஓட்டம் (கனிஷ்ட பகுதி) சரோஜினி நடராசா, கல்யாணி நடராசா, பத்மராணி மகாதேவா. 150 மீற்றர் ஓட்டம் (மத்திய பகுதி) மங்களதேவி அரசரத்தினம், தேவரஞ்சிதம் சிவக்கொழுந்து, அன்னராணி சபாரத்தினம். 200 மீற்றர் ஓட்டம் (சிரேஷ்ட பகுதி) மீனா ராஜலிங்கம், ராஜவதி ராஜரத்தினம். நித்தியலட்சுமி ராஜசிங்கம்.

குண்டு வீசுதல்: ரதி ராஜலிங்கம், விமலராணி கனகசபை (மத்தியபகுதி) செல்வராணி செல்வரத்தினம், (சிரேஷ்டபகுதி) விமலா அம்பலவாணர், சிவலக்சனம் மயில்வாகனம், சந்திரகீதா கேபிரியல்.

நீளம் பாய்தல் (கனிஷ்ட பகுதி) சரோஜினி நடராசா, கல்யாணி நடராசா, சிவனேஸ்வரி நமசிவாயம்.

நீளம் பாய்தல் (மத்திய பகுதி) ரதி ராஜலிங்கம், மங்களதேவி அரசரத்தினம், தேவரஞ்சிதம் சிவக்கொழுந்து

உயரம் பாய்தல் (மத்திய பகுதி) அன்னராணி சபாரத்தினம், சாந்தினி சின்னத்துரை, இந்திராணி ராஜேந்திரா.

உயரம்பாய்தல் (சிரேஷ்ட பகுதி) பிரபா சிவகுரு, சந்திரலீலா சின்னத்துரை, சுபத்திரா நாகலிங்கம்.

அணி வகுத்தல்: ஒபிள் காற்றினர், ஹாற்றர், குட்சைல்ட்.

ஜொலி ஸ்டார் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள் நல்லூர் அரசடி ஜனசக்தி விளையாட்டுக் கோஷ்டிக்கும் யாழ். வண்ணார்பண்ணை ஜொலி ஸ்டார் விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான கரபந்தாட்டப்போட்டியில் ஜொலி ஸ்டார் கோஷ்டியினர் ஜனசக்தி விளையாட்டுக் கோஷ்டியினரை வெற்றியீட்டினர். இப்போட்டி ஜனசக்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திருமணி கடமையாற்றினார்.

சிவப்பு இல்லம் முதலிடம்

உடுப்பிட்டி, ஞாயிறு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி விளையாட்டுப் போட்டியில் சிவப்பு இல்லம் 168 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், மஞ்சள் இல்லம் 127 1/2 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தையும், நீல இல்லம் 75 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

வெற் பெற்றவர்களுக்கு திருமதி ஜீவநாயகம் பரிசுகள் வழங்கினார்.

புதிய சாதனை

நீல இல்லத்தைச் சேர்ந்த எம். பாலசுப்பிரமணியம், ஈட்டி எறிதற் போட்டியில் இதற்குமுன் இருந்த சாதனையை முறியடிந்து கூடிய தூரம் எறிந்து புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்

மணிவாசகர் குருபூசை

இமையாணன், ஞாயிறு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் மாணிக்கவாசகர் குருபூசை சிறப்பாக நடைபெற்றது. வித்துவான் கார்த்திகேசு உட்பட பலர் பங்குபற்றி உரைநிகழ்த்தினார்கள்.

வானொலி

கொழும்பு

திங்கள் 27-6-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல் வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 இசைக்கச்சேரி, 7-45 கலைஏடு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-45 தமிழ் மூலம் சிங்களம், 9-45 எங்கள்விருப்பம், 10-00 நேயர் விருப்பம்.

வேம்படி மகளிர் கல்லூரி விளையாட்டு போட்டி முடிவுகள்

ஆறு புதிய சாதனைகள்

யாழ்ப்பாணம், திங்கள் வேம்படி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது. கிறிடி, ஹோர்ன்பி, லிதி, ஸ்கௌகுறோவ்ட் ஆகிய நாலு இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் ஹோர்ன்பி இல்லம் 24 புள்ளிகள் பெற்று முதலாவது இடத்தை வகித்துக்கொண்டது. கிறிடி 110 புள்ளிகளும் லிதி 106 புள்ளிகளும், ஸ்கௌகுறோவ்ட் 65 புள்ளிகளும் முறையே பெற்றன

ஆறு புதிய சாதனைகள்

இம்முறை நடைபெற்ற போட்டியில் மொத்தம் 6 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேற்பிரிவைச் சேர்ந்த கனகாம்பிகை கனகரத்தினம் குண்டெறிதல் போட்டியில் 24 அடி 8 அங்குலமும், கீழ்ப்பிரிவைச் சேர்ந்த மகேஸ்வரி பொன்னுத்தம்பி 25 அடி 3 1/2 அங்குலமும், மேற்பிரிவுக்கான பரிதிவட்டம் வீசும் போட்டியில் கனகாம்பிகை கனகரத்தினம் 72 அடி 1 3/4 அங்குல தூரமும், ஜெயபூஷணி சண்முகம் கீழ்ப்பிரிவுப்போட்டியில் 67 அடி 10 3/4 அங்குல தூரமும், சுலோசனாகணேசன் 66 அடி 1 1/4 அங்குல தூரமும் எறிந்திருந்தனர். கீழ்ப்பிரிவுக்கான 150 யார் ஓட்டத்தில் ஜெயபூஷணி சண்முகம் 20.4 செக்கனில் ஓடிமுடித்துப் புதிய சாதனைகளை நிலைநாட்டினர்.

சாம்பியன்கள்

மத்திய பிரிவுச் சாம்பியனாக மலைமகள் இரத்தினசிங்கமும், கீழ்ப்பிரிவுச் சாம்பியனாக ஜெயபூஷணி சண்முகமும், மேற்பிரிவுச் சாம்பியனாக மாலதி திஸநாயகமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஏனைய போட்டிகளில் வெற்றிபற்றோர் விபரங்கள்: குண்டெறிதல்

மேற்பிரிவு; கனகாம்பிகை கனகரத்தினம், சந்திரி ஆறுமுகம், விஜயலட்சுமி கனகசூரியர்

கீழ்ப்பிரிவுப் போட்டி: மகேஸ்வரி பொன்னுத்தம்பி சுலோச்சனா கணேஷ், பத்மினி குமாரசாமி.

மேற்பிரிவு நீளம்பாய்தல்: மானிதி திஸநாயகம், அருந்தவராணி பத்மநாதன் ஸ்காந்தமலர் ஆனந்தராசா

கீழ்ப்பிரிவு: புஷ்பராணி பாலசுப்பிரமணியம் சாந்தா இரத்தினசிங்கம், சரோஜா நடராசா.

பரிதிவட்டம் எறிதல்

மேற்பிரிவு: கனகாம்பிகை கனகரத்தினம், கமலேஸ்வரி இராசரத்தினம், நந்தினி சுவதாசன்

கீழ்ப்பிரிவு; ஜெயபூஷணி சண்முகம், சுலோச்சனா சண்முகம், மகேஸ்வரி பொன்னுத்தம்பி

உயரம் பாய்தல் மேற்பிரிவு:- ஜெயசோதி, அருந்தவராணி பத்மநாதன்.

கீழ்ப்பிரிவு: பத்மினி குமாரசாமி, மகேஸ்வரி பொன்னுத்தம்பி, சந்திரா பெரேரா.

150 யார் ஓட்டம் கீழ்ப்பிரிவு? ஜெயபூசணி சண்முகம், ரேவதி சிவக்கொழுந்து. சாந்தி இரத்தினசிங்கம்.

200 யார் ஓட்டம்: மேற்பிரிவு: மானிதி திஸநாயக்கா, புனிதவதி பாலசுப்காதரன், வனஜா பரம்சுகராசா.

சைக்கிள் ஓட்டம் பொது: செல்வி கே. இராசரெத்தினம், செல்வி எஸ். கணேசன், செல்வி புயெல்.

ஓய்வுபெற்ற ஊழியருக்கு மீண்டும் வேலைவாய்ப்பு?

யாழ்ப்பாணம், திங்கள் சிங்களச் சட்டத்தினால் வேலையிழந்தோர் கழக நிர்வாகசபைக்கூட்டம் திரு. எம் மகாலிங்கம் தலைமையில் நேற்று யாழ்ப்பாணம் வர்த்தக கணக்கியல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி கழக பிரதிநிதிகள் கோஷ்டி ஒன்று நிதி மந்திரியைப் பேட்டிகண்ட பொழுது அவர் வேலையில் இருந்து ஓய்வுபெற்ற ஊழியர்களை திரும்பவும் எடுத்துக் கொள்வதாக வாக்குறுதியளித்ததாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சம்பளஉயர்ச்சி விஷயமாக ஏற்கனவே நிராகரிக்கப்பட்டு, சங்கத்தின் பதில் நடவடிக்கையின் பயனாக மீண்டும் அரசாங்கத்தின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண மக்களே!

PURE BEVERAGES CO LTD. LION BRAND REGD. COLOMBO 2

உங்களுக்குத் தேவையான தித்திப்பு நிறைந்த

போட்டலோ

கொக்கா கோலா

"சிங்கம்" மார்க்

குளிர் பானங்களையும் உங்கள் அபிமான பானமான

தங்க முலாம் அன்னாசிப்பழ ரசத்தையும்

எங்கள் ஏஜண்டான

என். எம். சுல்தான் மொஹிதீன் ஹாஜியார் அன்ட் பிரதர்ஸ்

நிர்: 125, கே. கே. எஸ் வீதி, — யாழ்ப்பாணம்

ஸ்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி: 531 — யாழ்ப்பாணம்.

மாநகரசபை எல்லைக்குள்
கடமையே கண்ணாயுள்ள
எங்கள் விநியோக ஊழியர்கள் மூலம்
இலவச விநியோகம்

பியுவர் பிவரேஜஸ் கோ. லிமிட்டெட்

PURE BEVERAGES Co LTD.

Coca-Cola TRADE MARK REGD. LION BRAND TRADE MARK REGD.

யூனியன் பிளேஸ். கொழும்பு 2

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"தமிழரின் உரிமைகளை பாதுகாப்பேன்

பொருளாதார வளர்ச்சிக்கும் உங்கள் ஒத்துழைப்பு தேவை"

தமிழரசு மகாநாட்டில் பிரதமர் டட்லி

— நமது சிறப்பு நிருபர்கள் எஸ். எம். கோபாலரத்தினம் — கே. நடராசா —

இராசவரோதயர் அரங்கு (கல்முனை) சனி

தமிழ் மக்களின் மொழி, பண்பாடு, மதம் ஆகியவை பாதுகாக்கப்படும் என்றும் அவை மேன்மேலும் வளர்வதற்கான எல்லா செதிகளும் செய்துவைக்கப்படும் என்றும் இன்று பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா தமிழரசுக் கட்சியின் 10-வது வருடமந்த மகாநாட்டில் பேசுகையில் உறுதியளித்தார்.

பிரதம மந்திரியின் இந்த வாக்குறுதியை மகாநாட்டில் திரண்டிருந்த சுமார் 50 ஆயிரம் மக்களும் ஆரவாரம் செய்து வரவேற்றனர். கல்முனைக்கடற்கரைமைதானத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலந்துகொள்ள பிரதமர் மட்டக்களப்பிலிருந்து வந்தபொழுது அவருடன் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகமும் காரில் வந்தார்.

பலமொழிகள், பண்பாடுகள், மதங்கள் வழங்கும் பல இனங்கள் வாழும் ஒரு நாட்டில் அந்த இனங்களின் தனித் தன்மைகளைப் பாதுகாக்க வேண்டியது ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கையாகும். அந்தக் கொள்கையைப் பாதுகாப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று பிரதமர் கூறினார்.

நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு தமிழ் பேசும் மக்களின் ஒத்துழைப்பு தேவைப்பட்டது போல் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் இந்த ஒத்துழைப்பு தேவைப் படுகின்றது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

பிரதம மந்திரி தொடர்ந்து பேசுகையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தைப் பாராட்டினார். "நீங்கள் நேசக் கரம் நீட்டிய போது, அதை நான் பதவி மோகம் கொண்டு ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நாட்டில் ஒருமைப்பாட்டை உருவாக்கி சகல மக்களையும் மகிழ்ச்சியோடு வாழச் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடனேயே ஏற்றுக் கொண்டேன்" என்று கூறினார்.

பிரதமர் ஒரு கொள்கை வீரர்

— எஸ். ஜே. வி.

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் பிரதமர் கொள்கைக்காக வாழும் ஒருவர் என்று வர்ணித்தார். "அவர் தனது பதவியைப்பற்றி அக்கறையில்லாதவர், எந்தநேரத்திலும் பதவியை உதறித்தள்ள தயாராகவுள்ளவர், சகல இன மக்களும் சமானமாவும், பரஸ்பரம் நல்லெண்ணத்துடனும் வாழவேண்டும் நோக்குடன் அவர் உழைத்துவருகிறார்" என்றும் திரு. எஸ். ஜே. வி. குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

நாங்கள் தேசிய அரசாங்கம் அமைக்க ஒப்புக்கொண்டபோது பிரதமர் எங்களுடைய கொள்கைகள் முழுவதையும் ஏற்றுக்கொள்ளாத நேரத்தில் எங்கள் கொள்கைகளில் எதையும் கைவிடும்படி கேட்டதில்லை. தேசத்தின் ஐக்கியத்தையும், வளர்ச்சியையும், ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காவே தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. பிரதமர் ஒரு கொள்கை வீரர் என்பதாலேயே முந்திய மந்திரிகளுக்கும்கறுப்புக்கொடி பிடித்த அதே கைகளால் தமிழ் மக்கள் இன்று கூட்டம் கூட்டமாக நின்றுமாலை சூட்டினார்கள்.

பிரதமர் கொள்கை வீரர் என்பதற்கு அவர் ஆற்றிய பல கருமங்களை இங்கு கூறலாம். உதாரணமாக தோட்டப்பகுதியில் வாழும் நாடற்றவர்களுக்கு கூப்பன் அரிசி வழங்கக் கூடாது என்ற கோரிக்கையை நிராகரித்தார்.

நாட்டின் நலம் கருதி தமிழ் மக்கள் தங்கள் ஒத்துழைப்பை அளிக்க ஒருபோதும் தயங்கமாட்டார்கள்.

கூட்டத்துக்கு டாக்டர் இ எம் வி நாகநாதன் தலைமை வகித்தார்.

மகிழ்ச்சி

நான் என் வாழ்க்கையில் உண்மையாக அகமகிழ்ந்த சந்தர்ப்பங்களில் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டு சொற்பொழி வாற்றுவதும் ஒன்றாகும். இப்படியான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்ததற்காக தமிழரசுக் கட்சிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று பிரதமர் சொன்னார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

சிங்களவருக்கு எதிராகவல்ல

நேர்மைக்கும் தேசப்பற்றுக்கும் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் நாட்டில் பிரபல்யம் வாய்ந்தவராய் இருக்கின்றார். அவர் தமிழ் மக்களுக்காகப் போராட்டம் நடத்தி உரிமைக் கோரிக்கைகள் விடுத்ததும் யாவரும் அறிந்த விஷயம், ஆனால் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அவர் நடத்திய போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதொன்றல்ல. அது போலவே நான் தமிழ் பேசும் மக்களாகிய உங்களை எவ்வளவு தூரம் நேசிக்கிறேன் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

ஐக்கியம் தேவை

நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதற்கு தமிழ் மக்களின் ஒத்துழைப்பு தேவைப்பட்டது. அது போலவே நாட்டின் பொருளாதார பிரச்சினைகளைத் தீர்க்கவும் உங்களின் ஒத்துழைப்புத் தேவைப் படுகின்றது. இந்த ஒத்துழைப்பும் ஒருமைப்பாடும் தற்காலிகமானதாக இல்லாமல் நிரந்தரமானதாக இருக்க வேண்டும் என்பதே என் ஆசை. இந்த நாட்டில் இனி ஒரு போராட்டமும் ஏற்படாமல் நிரந்தரமான சமாதானம் நிலவ வேண்டும் என்பதே என் விருப்பம். இந்த நாட்டில் ஒரு பகுதி மக்கள் தனிநாடு கோரிப் போராடுவதை நான் விரும்பவில்லை. இந்த நாடு ஒன்றுபட்டு வாழவேண்டும் என்பதே என் விருப்பம்.

ஜனநாயகம்

ஜனநாயக ஆட்சியில் அரசியல், பேச்சு, பத்திரிகை ஆகிய சுதந்திரங்கள் அவசியம். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டு மக்களிடையே ஐக்கியம் நிலவவேண்டியது மிகமுக்கியமாகும். இந்த ஐக்கியம் இல்லையெனில் எல்லா சுதந்திரங்களும் பறிபோய்விடும். அதுபோலவே சிறுபான்மை மக்களின் கலை கலாசாரம் மொழி பண்பாடு, மதம் ஆகியவை பாதுகாக்கப்படுவதும் அவசியம்.

இப்பொழுது தான் நான் ஒரு அரசியல் வாதி என்ற வகையில் மகிழ்ச்சி அடைகிறேன். நாட்டின் பல்வேறு இனமக்களையும் ஒன்று படுத்த முடிந்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

"இது என் சொந்த நாடு" என்று பூரிப்போடு சொல்லக் கூடிய நிலைமை உருவானால் நான் மகிழ்ச்சியோடு இறப்பேன்.

ஜனநாயம்

ஜனநாயக ஆட்சியில் அரசியல், பேச்சு, பத்திரிகை ஆகிய சுதந்திரங்கள் அவசியம். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டு மக்களிடையே மத்தியில் ஐக்கியம் நிலவவேண்டியது மிகமுக்கியமாகும் இந்த ஐக்கியம் இல்லையெனில் எல்லா சுதந்திரங்களும் பறிபோய்விடும். அதுபோலவே சிறுபான்மை மக்களின் கலை கலாசாரம் மொழி பண்பாடு, மதம் ஆகியவை பாதுகாக்கப்படுவதும் அவசியம்.

இப்பொழுது தான் நான் ஒரு அரசியல் வாதி என்ற வகையில் மகிழ்ச்சி அடைகிறேன். நாட்டின் பல்வேறு இனமக்களையும் ஒன்று படுத்த முடிந்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனந்தக் கண்ணீர் சிந்தினர் கிராமவாசிகள்!

பிரதமருக்கு வழிநெடுகிலும் உருக்கமான வரவேற்பு

மட்டக்களப்பு, சனி

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்றுமாலை 4 மணிக்கு விசேஷ விமான மூலம் மட்டக்களப்பு வந்து சேர்ந்தார்.

மிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல அரசாங்க அதிபர்களும், எ ம். பி.க்களும் அவரை வரவேற்றனர். பிரதமரை வரவேற்கும்முகமாக சாரணச்சிறுவர்கள் அணிவகுப்பு ஒன்றும் நடைபெற்றது. பிரதமர் உள்ளூரிலுள்ள இந்துக்கோயில் பூஜையொன்றில் கலந்து கொண்டார். இன்று தமிழரசுமகாநாட்டுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமுகமாக அவர் கல்முனைக்குப் புறப்பட்டார். கல்முனை மட்டக்களப்பிலிருந்து பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா கிராமப்புறங்களுக் கூடாககாரில் பவனியகப் புறப்பட்டபோது கிராமிய மக்கள் வழி நெடுகிலும் அவரை அன்போடு வரவேற்று உபசரித்தார்கள். இப்பகுதியில் செல்வந்தர்கள் குறைவு ஏழை கிராமிய வாசிகள்தான் அதிகம் ஆனால் அந்த மக்கள் கண்களில் துளித்துநின்ற அன்பு செல்வத்தைபோல் பிரதம மந்திரி வேறு எங்குமே கண்டிருக்க முடியாது.

முதியவர்களாகிய ஆண்களும் பெண்களும் பிரதம மந்திரியைத் தமது கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தபடி கரங்கூப்பி வரவேற்ற காட்சி உருக்கமாகவும் உணர்ச்சிகளைத் தூண்டுவதாகவும் இருந்தது. இந்தக் காட்சியினால் பிரதம மந்திரியின் உள்ளம் கூட அன்பினால் உருகித்தான் இருக்கும்.

செல்வந்தர்களாலும் கிராம சபைகளாலும் அமைக்கப்பட்ட பந்தல்களும், வரவேற்பு வளைவுகளும் பிரமாதமாகத்தான் இருந்தன. ஆனால் ஏழைக் கிராமவாசிகள் தம் மலர்ந்த முகங்களால் அந்தப் பந்தல்களின் பெருமையை எல்லாம் தனிடுபொடியாக்கிவிட்டார்கள்.

நகரப் புறங்களுக்கு தொலைவிலுள்ள கிராமப் பகுதிகளின் வழியாகப் பிரதமரின் கார் நகர்ந்து சென்றபோது அனேகர் கொடிகள் கிடைக்காததால் 'கிரேப்' காகிதங்களால் கொடிகள் செய்து பிடித்துக் கொண்டிருந்தார்கள். சில இடங்களில் கிராம மக்கள் வர்ணத் துணிகளை கொடிகளாகத் தொங்கப் போட்டிருந்தார்கள். தமிழரசுக் கட்சி பிரதமருக்கு குதூகல வரவேற்பு அளிப்பதாக அறிவித்திருந்தது ஆனால் உண்மையில் வரவேற்பு கிராமவாசிகளின் கண்களிலும், முகப்பொலிவிலுமே தங்கியிருந்தது. ஒரு இடத்தில் பிரதமருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது அவர் பாதரட்சைகளின்றி பிரார்த்தனை புரிபவர் போல் நின்றார்.

வழிநெடுகிலும் வாழும் மூன்று சமூகங்களையும் சேர்ந்தமக்கள் பிரதமரை வரவேற்றார்கள். பிரதமர் நிர்மாணிக்கத்தீர்மானித்துள்ள தேசிய ஒற்றுமைக்கு இந்த மக்களின் ஒருமித்த வரவேற்பு ஒரு அம்சமாகும்.

தமிழ் ஆண்கள் வேட்டிகளும், சால்வைகளும் பெண்கள் வைபவங்களுக்கு உடுத்துவதுபோல் அழகான சேலைகளையும் அணிந்து காட்சியளித்தனர். முஸ்லிம்கள் சாரங்களும் கோட்டுகளும் அணிந்து கொண்டு இருந்தார்கள். பெண்கள் சாறிகளும், பர்தாவும் அணிந்து காணப்பட்டனர். ஆனால் அவர்கள் தம் முகங்களில் அணிந்து கொண்டிருந்த புன்னகையைப்போல், பிரதமருக்கு வேறு ஒன்றும் திருப்தி அளித்திருக்க முடியாது.

———

ஓய்வு பெற்ற . . .

(7-ம்பக்கத் தொடர்ச்சி)

இதுவிஷயமாக யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை மேற்படி சங்கத் தூதுக்குழு 28-ந் திகதி பேட்டி காண்பதென்றும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

விற்பனையாளர் தேவை

வந்தாறுமூலை,
ஏறாவூர்,
காத்தான்குடி,
ஆரைப்பற்றை,
கல்லாறு,
களுதாவளை,
நீலாவணை,
சம்மாந்துறை,
அக்கரைப்பற்று,
நிந்தாவூர்,
பொத்துவில்.

ஆகிய இடங்களில் 'ஈழநாடு' பத்திரிகை விற்பனை செய்வதற்கு ஏஜன்டுகள் தேவை.

மனுச்செய்யவும்;
விநியோக மனேஜர்,
ஈழநாடு,
த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம். 620

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org